குமரகுருபரன்



மலர் 13]   சுபகிருது-ஷூ ஆடி-மீ 1ம்-உ (16-7-62)   [இதழ் 7
தனிப் பிரதி 13 நயா பைசா   வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்,
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.

5. திரு. ஆ. சி. ஷண்முகநயினர் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா,
20, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை - 6.

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 13 | சுபகிருது-ஆடித் திங்கள் 1-ம்வ [16-7-62] | இதழ் 7

சிதம்பரச் செய்யுட் கோவை

ஸ்ரீமத். சிவஞானத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

[முன்னைய முதுபெரும் புலவர்
உயர்திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்]

[கட்டுரை 59]

இல்லைச் சிதம்பரம் ஐந்து மன்றங்களை உடையது. அவற்றுள் ஒன்று மணிமன்று. அதில் நிகழுந் திருக்கூத்தைச் செய்வது சிவமாகிய முழுமுதல். அம் முதற்பொருளை நோக்கி அழைத்து ஒரு வினவை ஆசிரியர் குமரகுருபரர் தோற்றி யருளினர். அவ்வினவில் ஒருவர்க்குப் புகழும் மற்றொருவர்க்குப் புகழாமையும் சேர்தலால், புகழப் பெறுவார்க்கும் பெறுதார்க்கும் முறையே மகிழ்வும் வெகுளியும் தோன்றலாம் அன்றோ ?

அப்பொருள் அமைந்த ஓர் அழகிய இனிய தலைசிறந்த செய்யுள் இது :–

– தரவு –

குழைதூங்கு கழைமென்றோட் கோமாரி கொலைக்கண்கள்
இழைதூங்கு முலைக்கண்வைத் தேயெய்தா நாணெய்த

உழைதூங்கு குயிலேங்க வுருமுத்தீ யுகநக்கு
மழைதூங்கு பொழிற்றில்லை மணிமன்று ணடஞ்செய்வோய்.

மீனேற்றின் றுவசத்தான் றனிதுஞ்ச விழித்தோய்நின்
ஆனேற்றின் றுவசமோ வடலேற்றி னூர்தியோ
கானேற்ற பைங்கூழின் கவளமாக் கணத்தின்கண்
வானேற்ற பகிரண்டம் வாய்மடுக்க வல்லதே.

எனவாங்கு

– சுரிதகம் –

பைந்துழாய் மவுலிப் பண்ணவ னுவப்ப
அந்தணர் பழிச்சவு மறத்தின் புங்கவன்
முனியான் முனிவன் போலும்
அனைய தன்றே யான்றோர் கடனே.

இது தரவிணைக் கொச்சகம். 65

இச்செய்யுளின் விளக்கம் :–

காளியைக் கௌமாரி என்றலும் உண்டு. அவள் 'வேயுறு தோளி'னள். அத்தோளில் காதணி ஒய்வெடுத்துக் கொண்' .மையால், 'குழைதூங்கு கழைமென்றோட் கோமாரி' எனப்பட்டாள், அத்தில்லைக் காளிதேவி. அவள் திருக்கண்கள் கொலைக்குறிப்பை வெளிப்படுத்தும் நிலைமை யுற்றன. அதனால், 'கொலைக்கண்' என்னும் விசேடமும் அவளுக்குண்டாயிற்று. தில்லைப் பதியின் வடபால் எல்லைக்கண் உள்ள காளியம்மையின் திருவுருவை நோக்கினார்க்கு இவ்வுண்மை நன்றாகத் தோன்றும்.

அக் 'கொலைக்கண்' மலைக்கண் ஏறி விற்றிருப்பதேபோலும் தோற்றத்தையும் ஏற்றத்தையும் எய்தலாம் என்னும் நோக்கத்தோடு மார்பின்கண் கிளைத்துப் பருத்த முலைக்கண் உற்றன. உற்றும், அத்தோற்றம் இல்லை. இன்றேனும் ஏற்றமாதல் இருக்கலாம் அன்றோ? ஏற்றமும் இல்லை. இல்லாதொழியினும் குற்றம் இல்லை. (ஏற்றம் × இறக்கம் இரண்டும் மறுதலைச் சொற்கள்.) ஏற்றத்திற்கு மாறாக, இறக்கத்தையே தோற்றியது அந்நிலைமை.

ஏன் இறக்கம் அப்பெருமாட்டிக்கு வந்தது? என்றும் இல்லாத நாணம் ஒன்றும் காலம் அது நம் அம்மையார்க்கு. வட பாற் கோபுரத்திற் புகுந்து சிவகங்கைக்குச் செல்லுங்கால் வலப் பால் உள்ள தேவியைத் தரிசிப்பாரும் இக் கருத்தோடு நோக்கு தல் நன்று. இருவர் (தேவியார்)க்கும் நிலைவேறுபாடுபுலப்படும். தில்லைக்காளியின் எல்லையில்லாத நாணம் ஒல்லைதோன்றும்.

பொன்மன்றின் வெளியே ஊர்த்துவ நடனம் புரியும் பேரம்பலத்தில், காளிக்கு நாணம் உண்டானதன் காரணம் தோன்றத் திருவுருவம் விளங்குகின்றதை யாவரும் அறிவர். ஆண்கள் செயலைப் பெண்கள் செய்யலாகுமோ? கால்தூக்கி யாடுதல் ஆணுக்கு இயலும். அவ்வளவிற் கால்அளவாவது பெண்ணால் காட்டத் தமிழ் நாட்டில் இயலுமோ? படக்காட்சி (துணித் தோற்றம்) அதையும் தோற்றும். என் செய்வது? காலக்கொடுமை. சீலக்கேடு. கலியின் வலி.

சிவபெருமான் திருக்கூத்தொடு தன்கூத்து எவ்வாற்றாலும் தோலாது என்று எண்ணி இறுமாந்த காளியம்மையின் வீறு, அவன் ஆடியருளிய ஊர்த்துவ தாண்டவத்தால் அடங்கிற்று. நாணினாள். நாணம் முன்னர்த் தலைக்கண் ஏறிற்று. அங்கு ஏறியும் சிறிதும் நில்லாது பின்னர் முலைக்கண் இறங்கிற்று. அகத்தே நாண்ஏறி இறங்கும் உண்மையைப் புறத்தே கொலைக் கண்கள் முலைக்கண் வைத்தமையால் அறியலாயிற்று. அவளுக்கு அந்நாணம் தோற்றியது ஊர்த்துவ தாண்டவம் தானே! அத்தகைய நாணம் அவட்கு வேறு எதனால் எய்த நேரும்? எதனாலும் நேராதன்றோ? அதனால், என்றும் எதனா லும் முன்பு எய்தாத நாண் ஆயிற்று அந்நாண். அந்நாணம் அவளுடைய கொலைக்கண்ணை முலைக்கண்மேல் இழுத்து இறக்கி அழுத்திற்று. அக்கொங்கை பொன்னிற் பதித்த மணியுடன் கூடிய பூணை உடையது. மணிக்கற்களை இழைத்துப் பதித்த தால் இழை எனப்பட்டது அப்பூண். அதனால் 'இழை தூங்கு முலை' எனலாயிற்று. கண்ணில் சிறு துகள்படினும் பெருந் துன்பம் உண்டாகும் கொலைக்கண்கள் ஆயினும், இழை தூங்கும் முலைக்கண்ணின் சார்பால், இழை (அக்கண்கட்கு) இழைத்த துன்பம் பெரிது.

இத்தகைய நாணம் அத்தகைய பெருமாட்டிக்கு உண்டாக ஊர்த்துவ தாண்டவம் புரிந்த முதல்வனது தில்லையில் உள்ள பொழிலின் மேல் மழை (முகில்) தூங்குகின்றது. அம்மழை நகுதலால் இடியும் மின்னலும் உகும். இடியைத் தீ என்றும் மின்னலை அத்தியின் ஒளி என்றும் அறியாதார் யார்? அஞ்சாதார் ஆர்.

'பேநாம் உரும்என வருஉம் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள'

என்ற தொல்காப்பியரும் உருமுத்தீயை அஞ்சினுரேயாவார். அச்சூத்திரத்தில், "கிளவியாமுறை" என்றது கிளவியாமுரை என்றிருத்தல் வேண்டும் என்று கூற யாமும் அஞ்சுகின்றேம். ஆயினும், மழை தூங்கும் பொழிலில், 'குயின்' ஏங்கும் என்றுரைத்தவர் சிறிதும் அஞ்சினுர் அல்லர். எவ்வாறு உரையெழுதத் துணிந்தாரோ எமக்குத் தெரிந்திலது. நம் தமிழ்த் தெய்வத்தின் பதிப்பில், 'குயில்' என்றிருப்பதை அவர் அறிந்தாரல்லர் போலும். குயினை (முகிலை)க் கண்டால் குயில் அடங்குவது காலவேறுபாட்டின் காரியம். கம்பர் "காரன்ன கூந்தற் குயிலன்னவள் கண் புதைப்ப மாரன் அனையான்...... ஆர் என்"றதாகப் பாடிய அருமையை இங்கு எண்ணுக. 'குயில் ஏங்க மழை தூங்கும் பொழில்' என்றதும், ஏங்குதற்கு ஏதுவாய் இடியாகிய தீ உகுத்தது என்றதும் அறியத்தக்கன. உழை – பொழிலுழை; இடம் பெயர்ச் சொல் உருபன்று.

சிவபெருமானுக்குரிய விடையை முத்திறத்திற் கொள்ளல் மரபு. வழிபடும் உயிர்களும் வழிபடாத உயிர்களும் அவனுக்கு விடையே. அதனுல்தான் 'பசுபதி' ("பசூநாம்பதி பசுபதி" எனப்பட்டான் பரமேசுவரன். "பசுத்துவ சம்யோகரத் பசு" என்றதால் அநாதியே பசுத்துவம் ஆகிய ஆணவத்தின் பிரதிபந்தத்தால் ஜீவான்மாக்கள் எல்லாம் பசு எனப் பெயர் பெறும். சிவபிரான் உயிர்க்குயிராய் உள்ளதால், 'பசுபதி' ஆனுன். உயிர்கள் பசு (விடை) ஆயின.

திருநந்தியும் அவனது விடையே. அவ்விடையை 'மழவிடை' என்பார். திருமாலாகிய விடையை அவ்விருவிடையினும் வேறு

படுத்திக் காட்ட 'மால்விடை' என்பது மரபு. 'பசு வேறும் எங்கள் பரமன்' என்னும் இடத்தில் மூன்றும் கொள்ளப்படலாகாது. திருநந்திதேவர் பசுத்துவம் இல்லாதவர். உயிர்க்கு ஆணவம் பிரதிபந்தம், கன்மம் அநுபந்தம், மாயை சம்பந்தம் ஆயினும் மூன்றும் பந்தமே.

கருவேளை விழித்தெரித்த கடவுளே, உலகத்தை ஒருகவள மாக்கி ஒரு நொடியில் உண்ணவல்லது கொடியோ? வாகனமோ? [கொடி மழ விடை. ஊர்தி மால்விடை. மழவிடைக்கு உணவு பைங்கூழ் (-பசிய பயிர்). திருமால் சகமேழுமளித்துண்ட சதுரர்.]

இவ்விருவினுல், உலகுண்ட சிறப்பு மால்விடை (ஊர்தி)க்கு உண்டு; மழவிடை (கொடி)க்கு இல்லை என்று தோன்றும். தோன்றவே மால் மகிழ்வார். நந்தி நந்தார். இதைப் 'பைந்து ழாய் மவுலிப் பண்ணவன் உவப்ப முனியான் முனிவன்' என்ருர் ஆசிரியர். 'பைந்துழாய்' கிடைக்க எளிதில் இனிதெனத் தின்னு மாறுபோல உலகை எளிதில் உண்டருளினுன் அப்பண்ணவன்.

தருமதேவதை திருநந்தி, அதனுல் 'அறத்தின் புங்கவன்' என்ருர். அறம் அந்தணர்க்கே சொந்தம். அதனுல், அந்தணர் பழிச்சு (வாழ்த்து)தல் இன்றியமையாததாயிற்று. முனியானது முனிவால் உலகு துயருறுதலைத் தவிர்க்கும். அறம் தவிராது வேண்டினவர் அந்தணர். பண்ணவனுவகை நலம் பயத்தலின் அதற்குப்பழிச்சுதல் வேண்டா. அறத்தின் புங்கவன் அறத்தின் நழுவிச் சினந்தால் உலகிற்குக் கேடுறும். உருது காக்க அந்தணர் வாழ்த்தி அறங்காத்தனர். 'முனியான் முனிவன்' 'ஆன்ருேர்கடன் அனையது அன்று' என்ற தொடர்களின் நயம் இன்பம் ஊட்டுவதாகும்.

(தொடரும்).

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 13, இதழ் 6-ன் தொடர்ச்சி]

I

SAMBANDAR

(Tamil: TIRU JNANA SAMBANDAMURTI SWAMI)

20. மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே.

The explanation of the term 'Fish-eyed maid,' which sounds curiously in English ears, is that in Madura Siva's consort is called Minakshi, i.e. fisheyed. The suggestion of the epithet, frequently applied to beautiful women, is that the motion of their eyes resembles the beautiful motion of a fish in water.

20. This is Alavay, where dwells the flame-formed lord of hosts, giver of the four Vedas and their meaning, with the fair fish-eyed maid. Here, reigning like the goddess of good fortune, Mangaiyarkkarasi the Chola king's daughter, braceletted chaste Pandian queen, daily serves and praises God.

—— (To be Continued)

பாட்டியல்

மதுரகவி மரபினர்,
திரு. T. N. N. கவிக்குஞ்சரப் பாவலர் அவர்கள்,
மெயின்ரோடு, வாளாடி P. O. திருச்சிராப்பள்ளி.

[மலர் 13. இதழ் 6-ன் தொடர்ச்சி]

பாற்பொருத்தம். 4

கதிப் பொருத்தத்தின்கண் தேர்ந்தெடுத்த எழுத்துக்களைக் கொண்டே பாற்பொருத்தம் அமைக்கவேண்டு மாகையான் நான்காவது பாற்பொருத்தம் பகரலுற்றும்.

(மூவகைப்பால்)

ஆண்பால் பெண்பால் அலியென நின்ற
மூன்றே பாலென மொழிந்தனர் புலவர். —பன்னிரு பாட்டியல்.

(இதன் - பொருள்) எழுத்துக்களை ஆண்பால், பெண்பால், அலிப்பால் எனநின்ற மூன்றுவகைப் படுத்தி அறிஞர் மொழிந்தனர்.

(ஆண்பால் எழுத்துக்கள்)

இருவகை ஐங்குறில் ஆண்பால் என்ப. —பன்னிரு பாட்டியல்.

(இ - பொ) உயிர்க்குறில் ஐந்தும், உயிர்மெய் வருக்கம் ஒவ்வொன்றிலும் உள்ள உயிர்மெய்க்குறில் ஐந்து ஐந்தும் ஆண்பால் எழுத்துக்கள் என்ப.

மேற்கோள் :

அகரமோ டைங்குறில் ஆண்பால் என்ப. —பின்னோர்.

(பெண்பால் எழுத்துக்கள்)

நெடிலேழ் இருவகைப் பெண்பால் என்ப. —பன்னிரு பாட்டியல்.

(இ - பொ) உயிர்நெடில் ஏழும், உயிர்மெய்வருக்கம் ஒவ்வொன்றிலும் உள்ள உயிர்மெய் நெடில் எவ்வேழும் பெண்பால் எழுத்துக்கள் என்ப.

(அலிப்பால் எழுத்துக்கள்)

ஒற்றும் ஆய்தமும் அலியெனப் படுமே. —பன்னிரு பாட்டியல்.

(இ - பொ) மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆய்த எழுத்து ஒன்றும் ஆகப் பத்தொன்பதெழுத்துக்களும் அலியெழுத்துக்கள் என்றுரைக்கப்படும்.

மேற்கோள் :

ஒற்றின் வருக்கமும் ஒன்பதிற் றிரட்டியும்
பெற்ற ஆய்தமும் பேடெனப் படுமே. —பின்னோர்.

(முதற்சீர்முன் வருதற்குரியபால்)

அவ்வவ் வெழுத்தே அப்பாற்குரிய
விரவினும் வரையார் அலியெழுத் தொழித்தே.
—பன்னிரு பாட்டியல்.

(இ - பொ) ஆண்பாலைப் பாடுமிடத்து ஆணெழுத்தும், பெண்பாலைப் பாடுமிடத்துப் பெண்ணெழுத்தும், முதற்பாவின் முன்னெழுத்தாக அமைத்தல் சிறப்புடைத்து. அலியெழுத்தைத் தவிர ஆண்பாற்குப் பெண் எழுத்தும், பெண்பாற்கு ஆணெழுத்துமாக அமைக்கினும் புலவர் நீக்கார். (உடன்பட்டு ஏற்பர்.)

அலிப்பாலைத் தவிர ஏனைய இருபாலும் மாறுபட்டுவரினும் மாசுஇல்லை என்பது கருத்தாம்.

மேற்கோள் :

மருவு குறிலாண் நெடில்பெண் ணவரவர்க்காம்
மயங்கினுமாம் வரலாகா பேடொற்றுய் தம்.
—சிதம்பரப் பாட்டியல்.

என்னுங் குறிலாண் இயைந்த நெடிலெல்லாம்
பெண்ணுகு மொற்றுய்தம் பேடாகும் — பெண்ணிரே

டாண்புணர்ச்சிக் கவ்வவ் வெழுத்தே மயங்கினுமாம்
மாண்பில்பே டென்ருர் மதித்து. —வெண்பாப் பாட்டியல்.

அவ்விரு பாற்கும் அலியெழுத் தாகா
தம்முள் மயங்கினும் தாவின் றென்ப. —பின்னோர்.

மாறுகோள் :

உயிரீ ராறும் ஆணென மொழிப
உயிர்மெய் யெல்லாம் பெண்ணென மொழிப
உடம்பெழுத்தெல்லாம் நபுஞ்சகமாகும். —பொய்கையார்.

அலி, பேடு, நபுஞ்சகம் என்னும் மூன்றும் ஒருபொருட் சொற்கள்.

பன்னிருபாட்டியல் இருவகைக் குற்றெழுத்துக்களை ஆண் பால் என்றும், இருவகை நெட்டெழுத்துக்களைப் பெண் பால் என்றும் இயம்பா நிற்க, ஈண்டுப் பொய்கையார் பெயரால் விளங்கும் இச்சூத்திரம் மட்டும் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் ஆண்பாலென்றும், உயிர்மெய் யெழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறும் பெண்பாலென்றும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் அலிப்பாலென்றும் இயம்பாநின்றது.

இங்ஙனம் கூறும் இருவர் மாறு கோளையும் கண்டு ஒருதலை துணிதல் கடமை யன்ரோ.

பொய்கையார் கூற்றே பொருந்தாத கூற்ரும். என்னை யெனின், எடுத்தியம்புவாம்.

ஆண்பாலைப் பாடுமிடத்து முதன்மொழியின் முன்னர் ஆணெழுத்தை அமைத்துப்பாடல் சிறப்புடைத்தென்று பாட்டியலார் அனைவரும் பகரா நின்ருர். அங்ஙனம் அமைக்கும் ஆணெழுத்தும் உயிரெழுத்தாய் இருத்தல் ஆகாது எனவும் கட்டளை இடுகின்றனர் (குமரகுருபரன் மலர் 13. இதழ் 6, பக்கம் 381-ல் காண்க.)

உயிர் பன்னிரண்டும் ஆண்பால் என்று பொய்கையார் கூறும் கூற்றை ஏற்கின் ஆண்பாலைப்பாடுமிடத்து முதன்

மொழியின் முன்னர் உயிரெழுத்தை அமைத்தல் வேண்டிவரும். அங்ஙனம் உயிரெழுத்தை முன்னெழுத்தாக அமைக்கின், "உடம்பு பிரிவுயிர் சாதருமே" எனக்கூறும், இந்திரகாளியச் சூத்திர விதிப்படி குற்றமாய் அமையும். ஆகையான் பொய்கை யார் கூற்றுப் பொருந்தாத கூற்றும்.

மற்றும், சிதம்பரப் பாட்டியல், வெண்பாப் பாட்டியல் முதலிய பிற பாட்டியல் நூற்கள் பொய்கையார் கூற்றை ஏற்காமையானும், சோதிடக்கலை நூற்கண்ணும் பொய்கையார் கூற்றுக்கு ஆதார மின்மையானும், பொய்கையார் கூற்றுப் பொருந்தாக் கூற்றுமெனத் தெளிக.

மெய்யெழுத்தெல்லாம் அலியெழுத்தாம் என்ற கொள்கை யைப் பாட்டியல் நூல் பகர்ந்தார் அனைவரும் ஒத்த கருத்துடன் உரைப்பதோடமையாது, அலியெழுத்தெனக் கூறும் அவ் வெழுத்துக்கள் முதன்மொழியின் முன்வரல் ஆகாதெனவும் அறையா நின்றார்.

இக்கூற்றை நோக்கிய ஞான்றே ஒல்காப்புகழ் பெறும் தொல்காப்பியச் சூத்திரம் கண் முன் தோன்று நிற்கும்.

அஃதாவது :—

உயிர்மெய் அல்லனமொழி முதலாகா. —*தொல்காப்பியம்.*

இத்தொல்காப்பியச் சூத்திரம் உயிருடன் கூடிய மெய் அல்லாதனவாகிய தனிமெய்யெழுத்து மொழிக்கு முதலாக வரல் ஆகாதென அறைதலான் சங்க நூற்களிலும், பரவை வழக்கின் கண்ணும், தனிமெய்யை முன்னெழுத்தாக உடைய சொற்கள் இல்லை என்பது தேற்றம்.

மற்றும், தொல்காப்பியனார் கருத்தைத் தழுவியே பவணந்தி முனிவர் தாமியற்றிய நன்னூற்கண்.

"பன்னீ ருயிரும் கசத நப மவய
ஞங வீரைந் துயிர்மெய்யும் மொழிமுதல்."

என மொழிக்கு முதலாக வருதற்குரிய எழுத்துக்களை எடுத்தோதினர். இப்பவணந்தியாரும் தனிமெய் மொழிக்கு முதலாக வரும் என இயம்பக்காண்கிலேம்.

இற்றை ஞான்றும் தண்டமிழகமெங்கும் தேடினும் தனிமெய்யை முன்னெழுத்தாக உடைய தமிழ்ச் சொற்களைக் காணவியலாது.

இங்ஙன மிருக்கப் பாட்டியலார் எல்லாரும் அலியெழுதுக்கள் (மெய்யெழுத்துக்கள்) மொழிக்கு முன்வரல் ஆகாதென அறைதல் விந்தை யன்றே எனச் சிலர் எண்ணக்கூடும்.

அவ்வாறு எண்ணல் நன்றன்று. பின்னர் ஏன் அலியெழுத்துக்கள் முன்வரல் ஆகாதென அறைந்தார்? எனின், இயம்புதும்.

தண்டமிழகத்தில் வந்து வழங்கும் வடசொற்களுள் மெய்யை முன்னெழுத்தாக உடைய சொற்களும் உள்ளன. அதனுற்றான் பாட்டியலார் தனிமெய்யை முன்னெழுத்தாக உடைய சொற்கள் முதன் மொழியின் கண் வருதல் ஆகாதென அறைந்தனர்.

உதாரணம் : வருமாறு :—

ஸ்வர்ணம், ஸ்ரீ: என்னும் இவ்விருசொற்களும் மெய்யை முன்னெழுத்தாக உடைய சொற்களாம். ஸ்வர்ணம் என்ற சொல் பொன் என்றும், ஸ்ரீ: என்ற சொல் திரு என்னும் பொருள் தருவதாயினும் முதன் மொழியின் முன் அவைகளுள் ஒன்று நிற்பின் பாட்டுடைத் தலைவனுக்குத் தீமையே உண்டாகும்.

உயிரற்ற உடல் பிணம் ஆமாறு போலவே உயிரேருத மெய்யெழுத்துக்களும் அமையுமென அறிக.

ஸ்வர்ணம் என்ற சொல்லைச் சுவர்ணம் என்றும், ஸ்ரீ: என்ற சொல்லைச் சீ என்றும் முதன்மொழியின் முன் அமைத்தலும் ஆகாவாம்.

இனி வருணப் பொருத்தம் கூறுவாம்.

(வளரும்)

நவக்கிரகத் துதி

கதிரும் மதியும் புவிமகள் தான்பெற்ற கான்முளையும்
முதிரும் கதிரை விழுங்கும் அராவும் முதுகுருவும்
சதிர்கொள் கதிர்மதிச் செல்வரும் தைத்தியர்தாம் பணிந்து
துதிசெய் புகருமென் நெஞ்சுறப் பஞ்சனற் றுன்பங்களே.

சூரியன்

உலவுங் கோள்கள் ஒன்பதிற்கும்
ஒளியை அளிக்கும் உயர்மகனுய்
நிலவும் பிதுர்க்கா ரகனுகி
நேத்தி ரத்திற் கதிபதியாய்
வலவன் அருணன் மகிழ்ந்தோட்ட
வாசி யேழும் பூண்தேரில்
சுலவி யுலகிற் கொளிசெய்கதிர்
துணைத்தாள் போற்றத் துயரிலையே.

சந்திரன்

ஓதும் புருடன் உளத்துதித்தே
யுலகின் இருளை யிரித்தகற்றி
மாதுர்க் காரகன் தானுகி
வளர்ந்தும் குறைந்தும் வருங்கயில
நாதன் முடிமேல் அமர்ந்தமுத
தாரை சொரியும் நன்னிலவார்
சீத மதியைத் தினம்போற்றச்
செறிந்து நில்லா தீங்குகளே.

அங்காரகன்

பூமான் பெற்ற புதல்வனுய்ப்
பௌமன் என்னும் பெயரினனும்
கோமான் உடற்கா ரகனுகிக்
குமுறும் போருக் கதிபனெனும்

மாமாண் புடைய செவ்வாய்ப்பேர்
மருவும் கோளைப் பௌருஷமார்
சீமான் றன்னைத் தினம்வழுத்தத்
தீரா இடர்கள் தீர்ந்திடுமே.

இராகு

ஈயும் திறத்தில் இணையிலதென்
றியம்பும் இருங்கோ ளிராகுதனைக்
காயும் கதிரை உவாநாளில்
கனன்று கவ்வும் காரரவை
ஏயும் ராசி தனில்தனக்கோர்
இடமின் றேனும் ராசிதனில்
மேய கோள்கள் தமையாளும்
விறலோற் போற்ற விடுமிடரே.

குரு

தருவின் இறைவன் இந்திரற்குத்
தகநூல் செய்து மற்றவற்குக்
குருவென் ளுெளிரும் உத்தமனைக்
குணமிக் கொளிரும் சுபக்கோளை
மருவார் கூந்தல் தாரையவள்
மகிழ்நன் புதல்வர்க் காரகனைப்
பொருவா ரில்லாப் புலவோனைப்
போற்ற இலவாம் புன்மைகளே.

சனி

தாவில் கதிரோன் தருசுதனைச்
சவுரி நாமம் தரித்தோனை
மேவும் ஆயுட் காரகனை
விளங்கும் காக்கை வாகனனை
யாவும் உதவ வல்லானை
நள்ளா றதனில் உள்ளானை
தேவன் றன்னைத் தினம்பணியச்
சேரா இன்மை பிணிநொடியே.

புதன்

கலையார் மதிதன் கான்முளையைக்
கன்னி மிதுனம் தனதிடமா
நிலையா கக்கொண் டொளிர்வோனை
நிலவும் வித்யா காரகனைத்
தொலையாப் புகழ்கொள் புந்தியினைத்
தூய கலைகள் தரும்புதனை
அலையா மனத்தின் அகங்கொள்ள
அனைத்துத் தீங்கும் அனற்பஞ்சே.

கேது

செம்பாம் பென்று பூரணையில்
தேனுர் மதியை வாய்க்கொண்டு
வெம்பா நிற்கும் கோளதனை
விளங்கும் ஞான காரகனை
அம்பாள் சுதனும் கணபதியை
யறிந்து போற்ற இடர்தீர்த்து
நம்பால் அருளும் கேதுவினை
நாளும் பணிய நன்றுமே.

சுக்கிரன்

ஆற்றல் அசுரர் தமக்காசான்
அரிய நூலொன் றுக்கியவன்
போற்றும் கண்ணன் கவிகட்குள்
உசநா கவிநான் எனப்புகழ
நாற்றிக் கினிலும் இசைவாய்ந்த
நல்லோன் களத்ர காரகனும்
சாற்றுன் துலைக்கோல் தமக்கதிபன்
தாளைப் பணியத் தாழ்விலையே.

ஆசிரியர், E. S. வரதராஜய்யர் B. A.,
நூலகர். டாக்டர் சாமிநாதய்யர் நூல்நிலையம்,
திருவான்மியூர், அடையாறு,
சென்னை—20.

உயிர் விளக்கம்

தேவார இசைமணி,
திரு. S. சங்கரநாராயணன் அவர்கள்,
ஸ்ரீ கண்டேசுவர சுவாமி திருக்கோயில் தாமரங்கோட்டை,
பட்டுக்கோட்டை தாலுகா·

உயிர் ஒளியுடையது. அஃது ஆணவ இருளால் விழுங்கப்பட்டது. அதனால் அது தானே ஒளிபெற இயலாமற் கிடக்கிறது. இறைவன் ஒளிவண்ணன்; அன்பாயிருப்பவன். அன்பின் இயல்பு பிறர் துன்பங்கண்டு இரங்கி அதைக் களைவது. அன்பாகிய இறைவன் உயிரின் நிலைகண்டு இரங்கி, அதன் இருளை அகற்றி, அதைத் தன்னைப் போலாக்கத் திருவுள்ளங் கொள்கிறான். கொண்டதும், அவனினின்றும் பிரியாத அருட்சக்தி, உயிருடன் மாயா சக்தியைச் சேர்க்கிறது. மாயை உடலாகவும் கரணமாகவும் உலகாகவும் போகமாகவும் பரிணமித்து உயிருக்குச் சிறு ஒளியை (சிற்றறிவையும் சிறு தொழிலையும்) வழங்குகிறது. ஒளியுடைய உயிர் ஆணவ இருளால் விழுங்கப்படுகிறது. இந்நிலை ஒளியும் இருளும் கலந்த ஒன்று. அருட்சக்தி மாயாசக்தியை உயிருடன் சேர்க்கிறது. மாயை ஒருவித இருள்; ஆணவ இருளைச் சிறிது ஒடுக்கும் பண்பு உடையது. அஃது உடல் உலகம் முதலியனவாகி, உயிரைச் சேரும் போது, உயிர் சிறிது ஒளி பெறுகிறது. உயிரில் இயற்கையாயுள்ள ஒளியே சிறிது விளக்கம் பெறுகிறது. ஆனாலும் உயிரின் சிறு விளக்கத்துக்குத் துணை நிற்கும் மாயா இருளிலும் ஒருவித ஒளி இருத்தல் வேண்டும். இல்லையேல் உயிரின் ஒளி சிறிதளவாதல் விளக்கம் பெறுவதாகாது. மாயையின் இயல்புணர்ந்த ஆன்றோரும், அதை, 'மாயாதனு விளக்கு' என்றே கூறிப் போந்தனர். அவர்க்கு மாயை விளக்காகத் தோன்றியது ஈண்டு கருதற்பாலது. ஆகவே, மாயா இருளில் ஒளிமிக நுண்மையாகக் கரந்திருத்தலை உன்னிப்பார்க்க.

மாயை என்னும் இருளொளியை உயிருடன் சேர்க்கும் அருட் சக்தி நீலநிறமுடையது; கருமை – இருள் – கலந்தது. அருட் சக்தி பேரொளியாகிய இறைவனிடம் நீக்கமற நிற்பது. பேரொளியாகிய இறைவனிடத்திலும் நீல இருள் திகழ்கிறது.

திங்களின் ஒரு பகுதியில் பௌர்ணமியும் (முழுநிலவும்) மற்றொரு பகுதியில் அமாவாசையும் (முழு இருளும்) உறு கின்றன. நெருப்புக் கனன்று நாவிட்டு எரியும்போது, அதன் விளிம்பில் நீலம் திகழ்கிறது. நமது உடலில் வலப் பக்கத்தில் வெம்மையும் (சிவப்பும்), இடப்பக்கத்தில் தண்மையும் (நீலமும்) உள்ளன. யோகியர் முதலில் கரு நீலங்கண்ட பின்னரே சிவப் பொளியைக் காண்பர். இன்னும் பல கூறலாம். எவ்வழியில் பார்த்தாலும் ஒளியும் இருளும் ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு விதமாகக் கலந்தும், மாறியும், ஒன்றினின்று ஒன்று பிறந்தும் இயங்கி வருதல் தெளிவாகும். கடவுளுக்குரிய நிலை இரண்டில் சொரூபம் (நிர்க்குணம்), குணம் குறிநிறம் முதலியன இல்லாதது; வாக்கு மனங் கடந்தது; தடத்தம் (சகுனம்) - இயற்கையை உடலாக் கொண்டது-அருள் முதலிய குணங்களையுடையது. அருட்குணத்துக்கு (நீல) நிறம் உண்டு. நிறங்கள் பலவற்றுள் ளும் அடிப்படையாயிருப்பன இரண்டு. ஒன்று சிவப்பு; மற் றொன்று நீலம். இவ்விரண்டும் தந்தை தாயாக நின்று பிறநிறங் களை ஈனுகின்றன. மூலமாக வுள்ள நிறங்கள் இரண்டும் முறையே வெம்மை தண்மை யென்றும், ஆண்மை பெண்மை யென்றும்அழைக்கப்படுகின்றன. இவ்விரண்டையுங்கொண்டது அர்த்த நாரீசுரம், முதற்பொருளின் தடத்த நிலையிலுள்ள சிவப் பும் நீலமும் முறையே ஒளியாகவும் இருளாகவும் உயிரிலும், உள்ளத்திலும், உடலிலும், உலகிலும் படிந்துள்ளன எல்லா வற்றிலும் ஒளியும் இருளும் எவ்வாறுதல் இருக்கை பெறுமென் அவைகளைக் கடந்த ஒரு நிலை சொருபம் இரவு பகலற்றது. இரவு பகலற்ற ஒளி விளக்கத்துக்கென்று, இரவு பகலுள்ள உலகம் நமக்கு இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது.

———

(தொடரும்)

மதுரைக் கலம்பகம் உரைநடை

தருமபுர ஆதீன வித்துவான்,
"திருவண்ணாமலை ஆதீனவிரிவுரையரசு, மதுரை ஆதீனச் சித்தாந்த சைவ வித்தகர், சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி"
வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

[மலர் 13. இதழ் 6-ன் தொடர்ச்சி]

சிலைசிலை யாக்கொண்ட தென்மது ரேசர் சிலம்பில் வில்வேள்
மலைசிலை யாக்கொண்ட வாணுத லாய்நின் மருங்குல் சுற்றும்
இலைசிலை யாக்கொண் டிளமானை யெய்திடு மிங்கிவர் பூங்
குலைசிலை யாக்கொண் டவர்போலு மாற்செம்மல் கொள்கை நன்றே. 74

மேருமலையை வில்லாகக் கொண்ட தென் மதுரைக்கிறைவராகிய சொக்கலிங்கப் பெருமானது மலையிலே உள்ள விற்போரில் வல்லவனாகிய மன்மதன் எதிர்த்துப் போராடுகின்ற வில்லாகக் கொள்ளப்பெற்ற ஒளி பொருந்திய நெற்றியை உடையவளே! உனது இடையிலே உடுக்கப் பெறுவதாகிய தழையை வில்லாகக் கொண்டு அதனால் இளையமானை எய்கின்ற இங்கேயுள்ள இத் தலைவர் பூங்கொத்துக்களை வில்லம்புகளாகக் கொண்ட மன்மதனுவார் போலும்! சிறந்த இத்தலைவரது கொள்கை நன்றாய் இருக்கிறது.

கொங்குரை யாற்றி லிட்டுக் குளத்தினிற் றேட நீடு
மங்குறேய் முதுகுன் றையர் மதுரையோ மதியில் பாண
எங்கையர் மனைக்கண் வைத்தாங் கெம்மிடைத் தேர்தி மற்றம்
மங்கையர் மனம்போ லன்றே மகிழ்நர்தம் வாழ்க்கை தானே. 75

அறிவில்லாத பாணனே! மாற்றுயர்ந்த பொன்னைத் திருமுதுகுன்றத்து மணிமுத்தாற்றிற் போட்டுவிட்டுத் திருவாரூர்க்

கமலாலயக் குளத்திலே தேடிப்பார்க்க அங்கே அது வந்து சேருவதற்குக்காரணமாகிய மேகங்கள் தோய்கின்ற திருமுதுகுன்றத் தலைவராகிய பழமலை நாதரது மதுரை யம்பதியோ? எமது தலைவரை சக்களத்திமார் வீட்டிலே இருக்க வைத்துவிட்டு எம்மிடத்திலே வந்து தேடுகின்றாய். மேலும் எமது கொழுநரது வாழ்க்கை எமது அந்த மங்கையரது விருப்பத்திற்கு உட்பட்டதல்லவா?

வாழிமடக் கிள்ளாய் மதுரா புரிவாழும்
ஊழி முதல்வர்க் குருவழிந்தேன் - ஆழியான்
சேய்தொடுத்த வம்போ திரண்முலையுங் கண்மலரும்
தாய்தொடுத்த வம்போ தலை. 76

இளமையான கிளியே! நீ வாழ்வாயாக. மதுரையம்பதியிலே எழுந்தருளி யிருக்கின்ற ஊழிக்காலத்திற்கு முதல்வராகிய சொக்கலிங்கப் பெருமானுக்கு உடம்பை இழந்து சக்கரப் படையையுடைய திருமாலின் மகனாகிய மன்மதன் என்மேல் விட்ட அம்புகளோ திரண்ட முல்லை மலரும் தேனையுடைய மற்றை மலர்களுமாம். எனது தாய் உண்டாக்கிச் சொன்ன பழிச்சொல்லோ அவ்வம்பினுங் கொடியதாகும்.

தருமுகத்து நிமிர்குடுமி மாடமலி கூடற்
சவுந்தரபாண் டியர்குடியாஞ் சமரினிடை யாற்று
தொருமுகத்தி லொருகோடி மன்னர்மடிந் தொழிந்தார்
உனைவிடுத்த மன்னவன்யா ருரைத்திடுவாய் தூதா
மருமுகத்த நெறிக்குழலெம் மடக்கொடியை வேட்பான்
மணம்பேசி வரவிடுத்த வார்த்தையது சொன்னாய்
திருமுகத்தி லெழுத்திதுவேற் றிருமுடியி லெழுத்தும்
தேர்ந்தறியக் கொண்டுவா சிகையினெடுஞ்சென்றே. 77

வானுலகத்திலே உள்ள கற்பகமரத்தின் உச்சியிலேசென்று உயர்ந்துள்ள சிகரங்களையுடைய மாளிகைகள் நிறைந்த கூடலம்பதியிலே உள்ள சுந்தர பாண்டிய மன்னரது குடியிலே பிறந்தவர்கள் நாங்கள். எங்களுடன் போரில் எதிர்த்து நிற்க முடியாமல் ஒரே முகமாக ஒரு கோடி மன்னர்கள் இறந்தொழிந்து போனார்கள். தூதனே! உன்னை எங்களிடம் தூதாக

அனுப்பிய அரசன் யாவன்? சொல்லுவாயாக. நறுமணத்தை யுடைய நெறிந்த கூந்தலைக் கொண்டவளாகிய எங்களது இளைய பூங்கொடி போன்றவளாகிய மகளைத் திருமணஞ்செய்து கொள்ளும் பொருட்டுக் கல்யாணம் பேசி வரும்படி அனுப்பிய செய்தியைச் சொன்னாய். நீ கொண்டுவந்துள்ள திருமுகத்தில் எழுதியுள்ள எழுத்து இதுவானால் அவனது அழகிய தலையில் எழுதியுள்ள விதியெழுத்தையும் ஆராய்ந்து அறிவதற்கு நீ சென்று குடுமியோடு அந்தத் தலையைக் கொண்டு வருவாயாக.

செல்லிட்ட பொழின்மதுரைத் தேவர்மணந் தடாதகா
தேவிக் கன்று
சொல்லிட்ட குறமகள்யான் றும்மலுநல் வரத்தேகாண்
சுளகி லம்மை
நெல்லிட்ட குறிக்குநீ நினைந்ததொரு பொருள துநித்
திலக்கச் சார்க்கும்
வல்லிட்ட குறியினொடும் வளையிட்ட குறியுளதோர்
வடிவு தானே. 78

மேகங்கள் தவழுகின்ற பூஞ்சோலைகள் சூழ்ந்த மதுரை யம்பதியிலேயுள்ள சுந்தர பாண்டியரது திருமணத்தைத் தடாதகைப் பிராட்டிக்கு அந்நாளில் முன்னரே அறிந்து கூறிய குறச்சாதிப்பெண் நான். இப்பொழுது வந்த தும்மலும் நல்ல வருகையை உடையதே. உனது தாய் முறத்திலே நெல்லைக் கொண்டு வந்து இட்ட குறியை ஆராய்ந்து சொல்லுமிடத்து நீ மனத்திலே அடையக் கருதியது ஒரு பொருளுண்டு. அப் பொருள் முத்துக் கச்சினால் இறுக்கிக் கட்டப்பெற்ற சூது ஆடு கருவிபோன்ற கொங்கைகள் அழுத்தியதனாலுண்டாகிய தழும்பு களோடும் கைவளைகளைப் பதியவைத்ததனா லுண்டாகிய தழும்பு களோடும் உள்ளதாகிய ஒரு வடிவமாகும்.

வடகலை யலபல கலையொடு தமிழ்வள ருங்கூடல்
விடவர வரையினர் திருமுனி தொருவர்வி ளம்பாரோ
குடதிசை புகையெழ வழலுமிழ் நிலவுகொ முந்தோடப்
படவர வெனவெரு வருமொரு தமியள்ப டும்பாடே. 79

மேற்குத் திசையிலே புகை மேலெழும்படி நெருப்பைக் கக்குகின்ற பிறைத் திங்கள் ஒளியை வீச அதனைக் கண்டு படத்தையுடைய பாம்புக்கு அஞ்சுவது போல அஞ்சுகின்ற கணவனைப் பிரிந்து தனியே இருப்பவளான இந்தத் தலைவி படுகின்ற இந்தத் துன்பத்தை வடமொழிக் கலைகளும் அவையல்லாத பிறமொழிக் கலைகளும் உடனாகத் தமிழ் வளருகின்ற கூடலம்பதியிலே எருந்தருளியுள்ள நச்சுப் பாம்பை அரைநாணாகக்கொண்ட இடையை யுடையவரான சொக்கலிங்கப் பெருமானது திருமுன்பே சென்று ஒருவர் சொல்லமாட்டார்களா?

பாட்டுக் குருகுந் தமிழ்ச்சொக்க நாதர் பணைப்புயமே
வேட்டுக் குருகுமெய்ந் நாணும்விட்டாள்வண்டு மென்கிளியும்
பேட்டுக் குருகும்விட் டாளென்செய் வாளனல் பெய்யுமிரு
கோட்டுக் குருகு மதிக்கொழுந் துக்கென் குலக்கொழுந்தே. 80

எனது சிறந்த கொழுந்து போன்ற இளமகள் தமிழ்ப் பாடலைக் கேட்டுத் திருவுள்ளங் கனிகின்ற செந்தமிழ்ச் சொக்கேசரது பருத்த திருத்தோள்களையே விரும்பித் தனது கைவளைகளையும் இயல்பா யமைந்த நாணத்தையும் விட்டு விட்டாள். வண்டையும் மெல்லிய கிளியையும் நாரைப் பேடையையும் அவரிடம் தூது விடுத்தாள். நெருப்பைக் கக்குகின்ற இரண்டு நுனிகளையுடைய வெள்ளிய பிறைத் திங்களுக்கு இவள் யாது செய்வாள்?

ஏமவெற் பென்றுகயி லாயவெற் பென்றுமல
யாசலத் தென்று முறைவார்
கோமகட் கன்பர்மது ரேசர்முச் சங்கம்வளர்
கூடலிற் சென்று புகலீர்
தாமரைக் கண்டுயிலு மாலெனச் சந்தமலி
சாரலிற் றுஞ்சு முகில்காள்
மாமதிப் பிஞ்சுமிரை தேர்குயிற் குஞ்சுமுயிர்
வாய்மடுத் துண்டொ ழிவதே. 81

செந்தாமரை மலரை ஒத்த திருக்கண் வளருகின்ற திருமாலைப் போலச் சந்தன மரங்கள் நிறைந்த பொதிய மலைச்

சாரலிலே தங்கி யிருக்கின்ற மேகங்களே! பெரிய பிறைத் திங்களும் இரையைத் தேடுகின்ற குயிலின் குஞ்சும் எனது உயிரை வாயிலே கொண்டு உண்டொழிவதைப் பொன்மயமான மேருமலையிலும் வெள்ளி மயமான கயிலாய மலையிலும் பொதிய மலையிலும் எழுந்தருளியிருப்பவரும் மலயத்துவச பாண்டியரது மகளாகிய தடாதகைப் பிராட்டியாருக்கு அன்புள்ள கணவரு மாகிய மதுரேசரது மூன்று சங்கங்கள் வளர்ந்த கூடலம் பதியிலே சென்று சொல்வீர்களாக.

(தொடரும்)

இராகம் : தன்யாசி தாளம் : மிஸ்ரசாபு

பல்லவி

எந்தன் துயர்தீர எளியேனைக் காத்திட
கந்தா க்ருபை பாரையா - வேல்முருகையா (எந்தன்)

அனுபல்லவி

வந்துடன் ரட்சிக்கச் சிந்தனைசெய்யும் உந்தன்
சொந்த அடிமை யன்றோ சுந்தரனே குகனே (எந்தன்)

சரணங்கள்

(1) தாயார் கருவினின்றும் தரணியிற் பிறந்ததும்
மாயப்பிறவி வஞ்ச வாழ்வில் ஓயாக்கவலை
காயமிருக்கும் போதே தீயவைகளை நீக்கா
நாயினும் கடையான நாயின்மேல் வாதா (எந்தன்)

(2) சின்னஞ் சிறியவர் செய்த பிழைபொறுத்து
அன்னைபோல் அன்புடன் ஆதரித்தருள் தர
இன்னும் பராமுகமேன் ஏழைமேல் வன்மமோ
அன்பன் முத்தையன் கொண்டதும் பாவஜென்மமோ
(எந்தன்)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

உ

திருச்செந்திலாண்டவன் துணை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு

★

[புதிய மலிவுப் பதிப்பு — 1961]

புதிய பதிப்பு பிரதி ஒன்றின் விலை ரு. 3-50 ந. பை. ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

(முந்தின பதிப்பு பிரதி ஒன்றின் விலை. ரு. 6/-)

(தபால் கட்டணம் வேறு)

768 பக்கங்கள் கொண்டது. (128 + 621 + 19) உயர்ந்தரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப் பெற்றது.

டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய குறிப்புரை, ஆராய்ச்சி, முதலியவற்றுடன் கூடியது.

ஒரே சமயத்தில் 5 பிரதிகளும் அதற்குமேலும் வாங்குபவர்களுக்கும் 20% கழிவு உண்டு.

இதன் விற்பனைத் தொகை ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்தைச் சாரும்.

கிடைக்குமிடம்:-

ஸ்ரீ T. M. குமரகுருபரன் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர்
ஸ்ரீவைகுண்டம் P. O. :: (திருநெல்வேலி மாவட்டம்)

உண்டி

வித்துவான், திரு. பொன். முருகையன் அவர்கள்
தமிழாசிரியர் ஸ்ரீகயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்
உயர்நிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

உண்டி என்றவுடனே கோயில்களில் வைத்திருக்கும் இரும்புப்பெட்டி ஞாபகம் பலருக்கும் வரலாம். ஆனால் நான் எடுத்துக் கொண்டது தோல், இரத்தம், மச்சை, சுவேதநீர் முதலிய பகுதிகளால் ஆகிய இந்த மனித உடம்பு நிலைபெறு தற்கு அவசியமான உணவினை, இவ்வுலகில் பிறந்த ஓரறிவு முதல் ஆறறிவு ஈறான எல்லா உயிர்களும் நிலைபெற வேண்டு மென்றால் அவசியமானது உயிர்ச்சத்து. அது பல விதமாகப் பலவகை முறையில் ஏற்றுக் கொள்ளப்படும். இவ்வுலகில் உடை, பொருள், கல்வி, இடம் இல்லாமல் வாழலாம். ஆனால் உணவு இல்லாமல் வாழ்தல் முடியாது. எனவே விலங்கு முதல் மனிதன் ஈறாக உணவினை உண்டே வாழ வேண்டும். அப்படிப் பட்ட உணவின் பெருமைகளை ஆய்வோம்.

உணவின் வகைகள்

உணவு சைவ உணவு, மாமிச உணவு என இரண்டு வகைப்படும்.

> "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத்து உண்ணாமை நன்று."

என்றும்,

> "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா வுயிரும் தொழும்."

என்றும் புலால் உணவினை மறுத்துத் தெய்வப்புலவர் திருவள்ளுவர் பேசிய காரணத்தால் அதனை விட்டு, உயிர்க்கும் உடம்புக்கும் உறுதி பயக்கும் சைவ உணவினைப் பற்றிப் பேசுவோம். தானியங்களையும், கீரைகளையும் பதப்படுத்தி அறுசுவையோடு தயாரிக்கப்படுவது சைவ உணவு. பெரும்பாலும் அரிசி, பருப்பு முதலிய தானிய வகைகளும், வெண்டைக்காய், வாழைக்காய் முதலிய கறிவகைகளும், முளைக்கீரை, அரைக்கீரை, வல்லாரை, தூதுளை முதலிய பச்சிலை வகைகளும் பிறவும் எல்லாம் சைவ உணவிற்குத் துணையாவன. இவற்றைக் கொண்டு அறுசுவை நிறைந்த உணவு வகைகளை வகைப்படுத்துவதில் தமிழர் என்றும் பின்னிட்டதில்லை. எந்த எந்த முறையில் உணவு வகைகளை உண்டாக்க வேண்டும் என்று சிந்தித்து, செய்து வரும் தமிழர் உண்டிப் பெருமை உலகம் அறிந்த ஒன்றே.

உணவின் இன்றியமையாமை

"சோற்றால் அடித்த சுவர்" என்று இந்தப் புன்புலால் யாக்கை அழைக்கப்படுகிறது. எனவே அந்த சோறு இன்றி ஒருபொழுதும் செயல்படாது. மாந்தர்க்குள்ள பசிப்பிணியைப் போக்கும் மருந்து உண்டியே. உணவு பெறுதவர்கள் படும்பாடு சொல்லும் தரத்ததன்று.

இதனை,

> "ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
> இருநாளைக்கு ஏலென்றால் ஏலாய் - ஒருநாளும்
> என்னோவு அறியாய் இடும்பைகூர் என்வயிறே
> உன்னோடு வாழ்தல் அரிது."

என்ற பாடல் உணர்த்துகிறது. "வயிறு காய் பெரும்பசி" என்று மணிமேகலை கூறுகிறது. என்றாலும் கிடைத்தபோது ஏற்றுக்கொள் என்று கொடுத்தால் ஏற்றுக்கொள்ளும் வழக்கம் வயிற்றுக்குக் கிடையாது. நாள்தோறும் குறித்த வேளையில் ஏற்ற உணவினை அளவோடு உண்ணும் வழக்கம் உடம்போடு அமைந்த நிலை. காலை, நடுப்பகல், இரவு என்ற மூன்று வேளைகளில் உணவினை உண்ணும் பழக்கம் பெரும்பாலும் உலகில்

எல்லா நாடுகளிலும் அமைந்து கிடக்கின்றது. இதனோடு ஓரிரு வேளைகளைச் சேர்த்து உண்ணும் நிலை சிலரிடம் அமைந்திருக்கிறது.

"மண்டிணி ஞாலத்து உயிர்கட் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே."

என்றும்,

"உண்டி முதற்றே உணவின் பிண்டம்."

என்றும் நூல்கள் உணவின் பெருமையைப் பலபடப் பேசுகின்றன.

புலவர் பட்டபாடு

பல ஊர்களையும் சுற்றிப் பார்த்து வந்த காளமேகப் புலவர் ஒரு நாள் இரவு தஞ்சை ஜில்லா திருத்துறைப்பூண்டிக்கு அருகிலுள்ள இடும்பாவனம் என்ற ஊருக்கு வந்து சேர்ந்தார். (இவ்வூர் சோழநாட்டில் பாடல் பெற்ற ஒரு சிவத்தலம்) பொழுது போய் விட்டது. இரவு நேரம். பசிக்கொடுமை வேறு. ஊரில் அன்ன சத்திரத்தில் உணவு கிடைக்கவில்லை. வீதியைச் சுற்றிக் கொண்டே வந்தார். ஒரு வீட்டிலும் உணவு கிடைக்கவில்லை. வீதியில் உள்ள ஒரு பாழடைந்த வீட்டின் திண்ணையில் கையைத் தலையணையாகக் கொண்டு படுத்தார் புலவர். உறக்கம் வரவில்லை. காரணம் கொசுக்கடி. பசிப்பிணியோடு கொசுக்கடியும் சேர்ந்து புலவரை வருத்தியது. அவ்வூர் இறைவன் மீது ஒரு பாடலைப் பாடினார் புலவர். அப்பாடல்,

பசிமுடுக நோவதல்லால் பாழ்வீட்டில் பாழ்த்த
கொசுகு கடியாலும் குமைந்தோம் — அளவில்
நெடும்பாவம் யாம்செய்தால் நீரென்ன செய்வீர்
இடும்பா வனநாத ரே.

எனவே பசிப்பிணிக்கும் கொசுக்கடிக்கும் இறைவன் காரணமல்ல. தான் செய்த பாவமே என்று புலவர் ஒப்புக்கொள்கிறார்.

எனவே பசிப்பிணி தாங்கக் கூடிய ஒன்றன்று. எனவே தான் அப்பசிப்பிணி போக்கப் பண்டைப் பெரியோர்கள் பல

அன்ன சத்திரங்களையும் நீர் வழங்கும் சாலைகளையும் உண்டாக்கி வைத்தார்கள். பெரிய மடங்கள், சத்திரங்கள் முதலியன உணவு வழங்கும் நிலையைப் பெற்றன.

அன்னதானம்

பாரினில் சிறந்ததானம் அன்னதானம். எந்தப் பொருளைக் கொடுத்தாலும் போதும் என்ற மனநிலை உண்டாகாது. ஆசை மேன்மேலும் வளர்ந்து கொண்டே செல்லும். ஆனால் உணவினைக் கொடுத்தால் "போதும்" என்றே சொல்லியாக வேண்டும்.

போதும் என்ற மனம்

விஜய நகரத்தை ஆண்ட ராயர் அரண்மனையில் ஒரு நிகழ்ச்சி. ஒரு நாள் அரண்மனை விதூஷகன் அரசர் முன்னிலையில் சென்று நின்றான். ராயரைப் பார்த்துக்கூற ஆரம்பித்தான். "அரசே, உன்னுடைய நாடு மிகவும் பெரிது. உன்னுடைய அரண்மனை மிகப் பெரிது. உன்னுடைய செல்வம் அளவற்றது. இருப்பினும் இதனுள் எது ஒருவனுடைய மனத்திற்கு "போதும்" என்ற எண்ணத்தை உண்டாக்குவது" என்று ஒரு புதிர் போட்டான். அரசர் திகைத்தார். இரவு முழுவதும் சிந்தித்தார். மறுநாள் சபை கூடியது. மந்திரி, சேனாதிபதி முதலியோர் கூடியிருந்தனர். ராயர் விதூஷகன் கேட்ட கேள்விக்கு விடை தருமாறு சபையோரிடம் தெரிவித்தார். எல்லோருடைய மனமும் புதிருக்கு விடையளிப்பதில் முனைந்தது. சேனாதிபதி முன்வந்தான். அவன் மூர்க்க குணம் படைத்தவன். அறிவில் கசடன். ராயரிடம் விடையளிப்பதாகத் தெரிவித்தான். ராயரும் ஒப்புக் கொண்டார். சேனாதிபதி சபையில் வந்திருந்த ஏழைக் குடியானவன் ஒருவனைக் கூப்பிட்டான். கையில் பிரம்பை எடுத்துக் கொண்டு அவனது முதுகிலும் காலிலும், மாறி மாறி "பளார் பளார்" என்று அடித்தான். அடி பொறுக்காமல், அந்தக் குடியானவன் "ஐயோ, போதும்" "ஐயா, போதும்" என்று அங்கும் இங்கும் ஓட ஆரம்பித்தான். இந்த நிகழ்ச்சி அங்குள்ளோர் மனத்தைக் கலக்கியது. எல்லோரும் சேனாதிபதியின் மீது கோபமும் குடியானவன் மீது தாபமும் கொண்டனர். இச்செய்கை சபையோரால் நிறுத்தப்பட்டது.

விதூஷகன் சபையில் உரக்கப் பேச ஆரம்பித்தான்.

"சேனாதிபதியின் செயல் என்னுடைய புதிருக்கு விடையளித்தாலும் பொருந்தாத செயலாகும். உயிருக்கும் உடம்புக்கும் துன்பம் தந்த செயல். அதே புதிருக்கு தர்ம நெறியில், உயிருக்கும் உடம்பிற்கும் பயன் தரும்படியான நிலையில் விடையளிக்கலாம். அரசர் உத்தரவிட்டால் நானே செய்வேன்" என்று கேட்க, அரசரும் ஒப்புக்கொண்டார்.

உடனே சபை நடுவில் ஒரு வாழையிலை போடப்பட்டது. சற்று முன் அடிபட்ட அந்த ஏழைக்குடியானவன் அந்த இலைக்கு முன் அமர்ந்தான். விதூஷகன் சொல்ல, அங்கிருந்து மந்திரி முதலியோர் பலவகை உணவுகளைக் கொண்டு வந்து அவனுக்குப் படைத்தார்கள். அடிபட்ட நிலையில் இருந்த குடியானவன் அவற்றை மிக விரைவாக உண்ண ஆரம்பித்தான். மந்திரிகள் மேலும் மேலும் பல வித பண்டங்களைக் கொண்டு வந்து அவனது இலையில் போட்டுக் கொண்டே இருந்தார்கள். அவனும் "போதும்" "போதும்" என்று முகமலர்ச்சியோடு அவற்றை உண்ண ஆரம்பித்தான். இந்தப் பிறவியில் புகழையும், மறுபிறவியில் நல்ல வினையினையும் உண்டாக்கியது "போதும்" என்ற சொல்.

உண்டியின் பாகுபாடுகள்:

உண்டி சிற்றுண்டி பேருண்டி என இருவகைப்படும். அவற்றுள்ளும் பேருண்டி பல வகைப்படும். அடிசில் என்றால் உணவு, அமலை, அயினி, உண்டி, உணா, ஊண், கூழ், சொன்றி, துற்றி, பதம், பாத்து, பாளிதம், புகா, புழுக்கல், புற்கை, பொம்மல், மடை, மிசை, மிதவை, மூரல், வல்சி முதலியன சோற்றைக் குறிக்கும் சொற்கள்.

"பத்து விதக்கறியும் பதினெட்டுப் பச்சடியும்
பொரித்த பொரிக்கறியும் பொன்போல் பருப்புகளும்"

என்று புகழேந்திப் புலவர் பாடுகிறார்.

அடிசில் என்பது உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன எனப் பலவகைப்படும்.

கறியும் சோறும் உண்டான்.
பாக்கு வெற்றிலை தின்றான்.
பாயசம் பருகினான்.

என்று பல வகையான வினைச்சொற்கள் அமைய உணவு வகைகள் அமைந்திருந்தன.

பண்டைக்கால நாயன்மார்களும், வள்ளல்களும் உணவினைத் தானம் செய்து அன்னதானத்தால் உண்டாகும் பேறுகளைப் பெற்றனர். இக்காலத்திலும் அன்னதானம் குறையவில்லை. இனிமேலும் நடைபெறும்.

இக்காலத்தில் சோற்றுக்கடைகளிலும் வீடுகளிலும் செய்யப்படும் பல வகையான பலகாரங்களும் இனிப்பு வகைகளும் அக்காலத்தில் கிடையாது. சர்க்கரை கலந்த அப்பம் (தீஞ்சோற்றுக்கடிகை) பாகில் செய்த பாகடை, வெல்லமும் பருப்பும் கலந்து செய்த அப்பம், பிட்டு வகைகள், பாற்சோறு, சர்க்கரைச்சோறு, புளிச்சோறு, வெண்சோறு முதலிய சோறுகளும், காய், கிழங்கு, இலைக்கறிகளால் செய்யப்பட்ட பொரியல், குழம்பு, சாறு முதலியனவும், மாவடு ஊறுகாய் முதலியனவும் செய்யப்பட்டதாக மதுரைக்காஞ்சி என்ற சங்க நூல் கூறுகிறது. இவையெல்லாம் புகார் நகரக் (காவிரிப்பூம்பட்டினம்) கடை வீதிகளில் விற்கப்பட்டன. இக்காலத்து மைசூர்பாகு, தோசை, இட்டலி முதலியன அக்காலத்தில் கிடையா. ரசம் என்று இக்காலத்தில் வழங்கப்படுவது சாறு என்று அக்காலத்தில் வழங்கப்பட்டது. இக்காலத்திலும் வைணவர்கள் வீட்டில் சாத்தமுது (சாறு + அமுது) என்று அழைக்கப்படுவது ரசமே. மோர்க்குழம்பு " தீம்புளிப்பாகர் " என்று சங்க நூலில் வழங்கப்படுகிறது.

நளபாகம், வீமபாகம் என்பன சமையலைப் பற்றிக்கூறும் நூல்கள். எனவே உண்டி சிறந்தது. அதனை எல்லோரும் பெற, ஏதுவாயிருப்பது அன்னதானம். மண்ணினில் பிறந்தவர்பெறும் பயன் அன்னதானம் செய்தல். எனவே நாமும் அன்னதானம் செய்வதற்கு ஒரு போதும் தயங்கக் கூடாது.

திருக்குறுக்கைச் சிவன்கோயில் கல்வெட்டு வரலாறு

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்
திருவையாறு

[கல்வெட்டுத் துறையின் 1927-ஆம் ஆண்டு அறிக்கையின் துணை கொண்டும் நேரில் படித்தும் இவ்வரலாறு எழுதலாயிற்று.]

திருக்குறுக்கை என்பது எட்டு வீரட்டத் தலங்களுள் ஒன்று. இது தஞ்சாவூர் மாவட்டத்தில் மாயூரம் தாலுகாவில் உள்ளது. இக்கோயில் தருமபுர ஆதினத்துக்குச் சொந்தமானது.

இத்திருக்கோயிலில் சோழமன்னர்களில் முதலாம் இராசராச சோழன், விக்கிரம சோழன், இராசாதிராச சோழன், மூன்றாங் குலோத்துங்கன் இவர்கள் காலங்களிலும், பல்லவ மன்னரில் கோப்பெருஞ்சிங்கன் காலத்திலும், விசயநகர வேந்தரில் வீரப் பிரதாப தேவ மகாராயர் காலத்திலும், பொறிக்கப்பெற்ற கல் வெட்டுக்கள் இருக்கின்றன.

மகாமண்டபத்தைக் கட்டியவன்

இத் திருக்கோயிலின் மகாமண்டபத்தைக் கட்டியவன் மூன்றாங் குலோத்துங்க சோழ மன்னன் ஆவன். இச்செய்தி "ஸ்வஸ்தி ஸ்ரீ இத்திருமண்டபம் மதுரையும் பாண்டியன் முடித் தலையுங் கொண்டருளிய குலோத்துங்கசோ......என்றும் கல் வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

இரண்டாங் கோபுர வாசலின் பெயர்

இரண்டாங் கோபுரத் திருவாசலுக்கு மநுவாசன் திருவாசல் என்று பெயர். இவ்வாறு அவ்வாயிலின் வடபக்கத்து நிலைக் கல்லில் பொறிக்கப்பெற்றுள்ளது.

ஏப்பிரல் 1962 'திருக்கோயில்' பதிப்பாசிரியர் சென்னை அறநிலைய ஆணையர் அவர்கள் அனுமதிபெற்று இவ்விதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இறைவரின் திருப்பெயர்:-இறைவர் திருக்குறுக்கையுடைய திரு விரட்டானமுடையார் என்னும் பெயரால் கூறப்பெற்றுள்ளனர்.

வீதிக்கு எழுந்தருளும் இறைவரின்பெயர்:— திருவீதிக்கு எழுந் தருளும் இறைவர்க்குக் கூத்தராய் விதிபோந்தார். வீதிவன நாதர் என்னும் பெயர்கள் வழங்கப்பெற்றுள்ளன. இவைகளுள் முன்னையது "கூத்தராய் விதி போந்தார் குறுக்கை வீரட்டனுரே" என்னும் தேவார அடியை நினைவிற்குக் கொண்டு வருகின்றது.

பள்ளியறை இறைவியாரின் திருப்பெயர்:— பெரிய நாச்சியார். இச்செய்தி மூன்றாங் குலோத்துங்கன் அரியணையேறிய இருப தாம் ஆண்டில் பொறிக்கப்பெற்றுள்ள "பலிசையால் முதலான நெல்லில் திருப்பள்ளியறை பெரிய நாச்சிக்கும்........நெல்லு குறுணியும்" என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக் கின்றது.

திருவிழா:— "இக்கோயில் உடையார் கூத்தர் திருவீதி போந்தார்க்கு திருவைகாசித் திருநாள் திருவெழுச்சிப்புற இறையிலியாகவும், இந்நிலத்து எட்டுப்படி நெல்லுக்கு ஒக்க தலைமாறுபிடாகை சோழபாண்டிய நல்லூரில் ஒழுகிநபடி ஏரி நீர்நிலை தரமில்"— என்னும் கல்வெட்டுப் பகுதியால் ஆண்டு தோறும் வைகாசித் திங்களில் திருவிழா நடைபெற்று வந்தமை அறியக்கிடக்கின்றது.

தலவரலாற்றை வற்புறுத்தும் ஆதாரம்:— முதற்கோபுரத்தின் மேற்குப் பக்கத்தில் "குறுங்கை மஹாமுனிரிஷி நித்தியம் சதா சேர்வை"என்று செதுக்கப்பட்டுள்ளது. இதற்குக்கீழே குறுங்கை முனிவரின் படிவமும் இருக்கின்றது. இச்செய்தி இத்தல வர லாற்றை வற்புறுத்தும் ஆதாரமாயுள்ளது.

அளிக்கப்பெற்ற நிவந்தம்:— இராசாதி ராச தேவரின் ஆறும் ஆண்டில், திருக்குறுக்கையான விக்கிரமசோழ சதுர்வேதிமங் கலத்து மகாசபையார் திருவிரட்டான முடையார்க்குச் சந்திரா தித்தவரை திரு அர்த்த சாமத்துக்கு நாளொன்றுக்கு நூறு செங்கழு நீர்த் திருப்பள்ளித்தாமம் நித்தற்படி சாத்தக்கடவதன் பொருட்டு ஊரின் கிழ்பால் நிலம் அளிக்கப்பெற்றிருந்தது.

மேற்குறித்த மன்னரின் பதினுன்காவது ஆண்டில் திருக் குறுக்கையுடைய வீரட்டானமுடையார்க்குத் திருநந்தவன உட லாக, உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் அருமருந்தை அரையன் சிவேதனப் பெருமான், குறுக்கையான இருமடிசோழ சதுர்ப்பேதி மங்கலத்தில் பிரிந்த குலோத்துங்கசோழ நல்லூரில் ஒன்பதுமா முக்காணி நிலத்தை விலைக்கு வாங்கிக் கொடுத் துள்ளான். மூன்ரும் குலோத்துங்க தேவரின் இருபதாம் ஆண்டில் திருநாவுக்கரசு திருக்குகையில் எழுந்தருளின மகேசு வரர்களுக்கு அமுது செய்வித்தருள நூற்று ஒருபத்து ஐங்கலனே தூணி நெல் வைக்கப் பெற்றுள்ளது. இந்நெல்லைப் பலர்க்கும் பொலிசைக்கு உபயமாகக் கொடுத்துப் பலிசையால் முதலான நெல்லைக்கொண்டு அவ்வறம் நடத்தப்படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. [குகை-மடம். முதலாக—மூலதனமாக. மாகேசுவரர்—சிவனடியார். பொலிசை—வட்டி. இது பலிசை என்றும் கூறப்படும்.]

மனை விற்பனை

மூன்ரும் குலோத்துங்க சோழனின் முப்பதாம் ஆண்டில் இக்கோயில் ஸ்ரீ மாகேசுவர கங்காணி செய்வாரும், சிகாரியஞ் செய்வாரும், தேவதானம் கோயில் கணக்கரும் உள்ளிட்ட அனைவரும் இக்கோயில் திருமடை விளாகத்து இருந்த ஆண் டார் ஐயங்கொண்ட சோழ மண்டலத்து மணவில் கோட்டத்துப் பழையனூர் நாட்டு உடையார் நெல்மலி கிழான் திருஏகம்ப முடையான் கந்தையாபரணர்க்குக் குகையாக அஞ்சரைக்கோல் மனையை நூறு காசுக்கு விற்று அவைகளை ஸ்ரீ பண்டாரத்தில் ஒடுக்கலாயினர்.

பண்டை வழக்கம்:—"ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு ஆருவது...நாயற்று பூர்வ பக்ஷத்து திருதியையும் சனிக்கிழமையும் பெற்ற புனர்பூசத்து நாள் விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கையான விக்கிரம சோழ சதுர்ப்பேதிமங்கலத்து மகாசபையோம். நம்மூர் உடை யார் திருவீரட்டான முடையார் கோயிலில் மூலப்பிரத்தியரான ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு நாங்கள் ஊர் கீழ் இறையிலி

செய்து குடுத்த பரிசாவது உடையார் திருவிரட்டான முடையார்க்குத் திருவர்த்த சாமத்துக்கு"—என்னும் இக்கோயிற் கல்வெட்டுப் பகுதியால் சிவாலயங்கட்குச் சண்டேசுவரர் பெயரால் சாசனம் செய்துகொடுக்கும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது என்பதை அறியலாம் [மூலப்பிரத்தியர்—பழைய அடியார்]

பிரகுறிப்புக்கள்:— இவ்வூருக்கு அருகிலுள்ள பனையூர், ஆற்றூர் என்னும் ஊர்களின் பெயர்கள் இக்கோயில் கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றன. இவைகளுள் ஆற்றூர், இராசநாராயண சதுர்வேதிமங்கலம் என்னும் வேறு பெயரையும் பெற்றிருந்தது. இந்த ஆற்றூர்க்கு மந்தாரவனம் என்னும் பெயர் உண்மையால், "மண்ணிப்படிக்கரை வாழ்கொழி புத்தூர் வக்கரை மந்தாரம் வாரணாசி" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள மந்தாரம் என்னும் வைப்புத்தலம் இந்த ஆற்றூரே என்பர் டாக்டர் மகாமகோபாத்தியாயஐயர் அவர்கள். [மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் முதற்பாகம்]

திருவேந்திபுரம் தேவநாயகப் பெருமாள் கோயில் கல்வெட்டு வரலாறு*

திருவேந்திபுரம் என்பது தென்னார்க்காடு மாவட்டத்தில் கூடலூர் தாலூகாவில் உள்ள ஊராகும். இவ்வூரிலுள்ள தேவநாயகப் பெருமாள் கோயிலில், சோழமன்னர்களுள் முதற் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இவர்கள் காலங்களிலும், பாண்டிய மன்னர்களில் திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரம பாண்டியன், திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டிய தேவன் இவர்கள் காலங்களிலும், பல்லவ மன்னரில் கோப்பெருஞ் சிங்கன் காலத்திலும் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இவ்வூர் இக்காலம் திருவேந்திபுரம் என்று வழங்கப்பட்டாலும், இக்கோயில் கல்வெட்டுக்களில் திருவயிந்திரபுரம் என்று கூறப்பெற்றுள்ளது.

* See the South Indian Inscriptions Volume VII.

திருமாலின் திருப்பெயர் :- இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் திருமால், திருவயிந்திரபுரத்து ஆழ்வார், தெய்வநாயகன் என்னும் பெயர்களால் கூறப்பெற்றுள்ளனர்.

மேற்குக் கோபுரத்தைக் கட்டியவர் :- இக்கோபுரத்தைக் கட்டியவன் பெருமாள் வெண்ணுடையான் ஆவன். இச்செய்தி "ஸ்வஸ்தி ஸ்ரீ அவனி ஆளப்பிறந்தான் கோப்பெருஞ் சிங்க தேவர் திருமேனிக்கு நன்ருக செங்கனிவாயன் சோழகோன் தம்பி பெருமாள் வெண்ணுடையான் செய்வித்த திருக்கோபுரம்". என்னும் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. (S. I. I. Vol VII No. 770).

எழுந்தருளுவிக்கப்பெற்ற திருமேனி :-

மேயூர் மிலையங்கிழான் மன்றில் குனிக்கும் பெருமாளான அபிமான துங்கப் பல்லவரையன் இக்கோயில் வாசலடியில் சிவராக நாயனுரை எழுந்தருளுவித்து, அவர்க்குச் சிறுகாலை காலை சந்திக்கு இரண்டு விளக்கும், உச்சிசந்திக்கு இரண்டு விளக்கும், இராக் காலத்துக்கு எட்டுத் திருவிளக்கும், ஆகத் திருவிளக்கு பன்னிரண்டும் சந்திக்குப் புத்து நாழிகை எரிக்கவும், மாதம் ஒன்றுக்கு நான்கு முறை எண்ணெய்க்காப்பு சாத்தவும், மும்மாவரை முந்திரிகை நிலத்தை எழுநூறு காசுக்கு வாங்கிக் கொடுத்துள்ளான்.

ஏரிகள் :-

இவ்வூரில் சோழகேரளப்பேரேரி, ராசேந்திரசோழப் பேரேரி என்னும் இரு ஏரிகள் முதற் குலோத்துங்க சோழனின் 23 ஆண்டுக் கல்வெட்டில் (அதாவது கி. பி. 1093-ஆம் ஆண்டில்) குறிக்கப்பெற்றுள்ளன. எனவே அவை மிகப் பழமைவாய்ந்தவைகளாகும்.

உலகமுண்டான் திருத்தோப்பு:- இத்தோப்பை ஏற்படுத்தியவன் புத்துழான் திருவரங்கச் செல்வன் வில்லவராயன் ஆவன். இத்திருத்தோப்பு கெடிலவாற்றுக்கும் திருச்சக்கரதுறைக்கும் தெற்கு, விளங்குளத்து கழனிக்கு மேற்கு, பிள.......காலுக்கு

கிழக்கு, மலைக்கு வடக்கு இந்நான்கு எல்லைக்கு நடுவுட்பட்ட தாகும். இத்தோப்பில் தெங்கு, பலா, புளி, நெல்லி, இலுப்பை முதலானவைகளைப் பயிரிட்டு, ஆண்டுதோறும் 1500 தேங்காய் எண்ணவும், நாயனுர் தெய்வநாயகன் திருமுன்பு திருநந்தா விளக்கு மூன்றுக்கு எண்ணெய் மூவுழக்கும், நாச்சியார் பூமிபிராட்டி யார் திருமுன்பு சந்திவிளக்காகப் பதினைந்து திருவிளக்கு இடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இது நிகழ்ந்தது திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டியத்தேவரின் 15-ஆம் ஆண்டில் ஆகும்.

அளிக்கப்பெற்ற நிலநிவந்தம்

திருமடைப்பள்ளிப் புறமாகவும், திருநாட்களில் எழுந் தருளவும், இக்கோயிலில் நித்தம் பத்துக்கலம் திருவக்கிரம் உண்ணக் கடவவும், ஆக இவ்வூர் (திருவேந்திபுரம்) சோழ கேரளப் பேரேரி உடையெரிப்பட்டு நெல் விளைந்து வருகிற நிலம் சோழகேரளப் பேரேரித் தொட்டு வாய்க்கு வடக்கும், இராசேந்திர சோழப் பேரேரிகரைக்கு மேற்கும் இவ்வேரி கரைக்குத் தெற்கும், பராக்கிரம வதிக்குக் கிழக்கு இவ்வதிக்கு மேற்கும், சேந்தபிரான் வாய்க்கால் பழவாய்க்காலுக்குக் கிழக் கும் ஆக, இந்நான்கு எல்லைக்குள் உட்பட்ட இருபதுவேலி நிலத்தை முதற்குலோத்துங்க சோழன் காவனூர் மடத்தில் எழுந்தருளியிருந்த காலையில் அளித்துள்ளான். இந் நிலம் அளிக்கப்பெற்ற காலம் இம்மன்னன் அரியணை ஏறிய இருபத்து மூன்ரும் ஆண்டாகும். (அதாவது இற்றைக்கு 868 ஆண்டு களுக்கு முன்பாகும்.)

இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு

இவ்வூர், முதற்குலோத்துங்கன், விக்கிரமசோழன் இவர்கள் காலங்களில் விருதராஜ பயங்கர வளநாட்டு, மேற்கா நாட்டுக்கு உட்பட்டிருந்தது.

சரித்திரத்துக்குப் பயன்படும் அரிய செய்

"கோப்பெருஞ்சிங்கன் இருந்த எள்ளேரியும் கல்லியூர் மூலையும், சோழகோனிருந்த தொழுதகையூரும் அழிந்து வேந்

தன் முதலிகளில் வீரங்க நாடாழ்வான் சீனத்தரையன், ஈழத்துப் பராக்கிரமபாஹு உள்ளிட்ட நான்கு பேரையும் கொன்று''— என்றும் இத்தேவநாயகப் பெருமாள் கோயில் பிராகாரத்து மேலைச்சுவரில் காணப்பெறும் கல்வெட்டுப் பகுதியில் காணப் பெறும் கல்லியூர்மூலை என்பது, தென்னூர்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் தாலூகாவில், சிதம்பரத்துக்கு மேற்கே சுமார் 12 மைல் தூரத்தில் வீராணத்து ஏரியின் கீழ்க்கரையில் உள்ள கலியமலை என்னும் ஊராகும். இவ்வூர்ச் சிவன்கோயிலில் உள்ள பழைய கல்வெட்டுக்கள் இவ்வூரைக் கல்லியூர் என்றும், பிற் காலக் கல்வெட்டுக்கள் கல்லியூர்மூலை என்றும் குறிப்பிடு கின்றன. இவ்வூர்க்குத் தெற்கே சுமார் மூன்று மைல் தூரத்தில் எள்ளேரி என்னும் ஊர் இருக்கிறது. இச்செய்தி சரித ஆராய்ச்சி செய்வார்க்குப் பெரிதும் பயன்படும்.

வீரநாராயணன் என்பது முதற்பராந்தக சோழனது சிறப்புப் பெயர்களில் ஒன்ருகும். அவனுல் வெட்டப்பட்ட வீர நாராயணன் ஏரி இக்காலம் வீராணத்து ஏரி என்று வழங்கப் பெறுகின்றது. இவ்வேரி முதல் முதல் இவ்வூரிலிருந்து கல்லப் பட்டது (அ) தோண்டப்பட்டது. ஆதலால் இவ்வூர்க்குக் கல்லி யூர் என்று பெயர் வந்தது.

[குறிப்பு:— இக்கோயில் கல்வெட்டு இதுவரை படியெடுக் கப்படவில்லை. இவைகளை யான் எழுதுவதற்கு மூன்றுநாட்கள் வரை, வேண்டும் உணவு முதலிய வசதிகளை அளித்த காட்டு மன்னூர் கோயில் நாட்டு சின்னப்பண்ணை, திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்களைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.]

திருவுந்தியார் - விளக்கவுரை

பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

[மலர் 13. இதழ் 6-ன் தொடர்ச்சி]

உள்ளம் உருகில் உடனாவர் அல்லது
தெள்ள அரியர்என்று உந்தீபற
சிற்பரச் செல்வர் என்று உந்தீபற. 7

(வி - ரை) உயிர்களுக்குத் தலைவராக விளங்கியருளும் அருட் செல்வர் சிவபெருமானே யாவர். அப்பெருமான் உயிர்கள் தோறும் உடனின்று உதவுகின்றார். எனினும் அவ்வுண்மையைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதியுணர்வார்கள் அறிய இயலுமேயன்றி, அல்லாதார் ஆய்வுக் கண்கொண்டு காணுதற்குரியரல்லர் என்றவாறு. இப்பாடல் ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதித்துக் காண்டற்கியலாத பரம்பொருளை, வினையேன் 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்றபடி அழுது அழுது முதிர்ந்த உருக்கத்தாலேயே காண இயலும் என விளக்குகின்றது.' 'காதலாகிக் கசிந்து'' என்றும் 'களித்துக் கலந்ததோர் காதற் கசிவொடு' என்றும் தொடங்கும் திருமுறைகள் ஈண்டு ஒப்பிட்டு உணர்தற்குரியன. "உயிரலை வாலத்து உணர்வு நீர் பாய்ச்சி வளர்ப்பார்க்கு ஒளி பூத்து அருள் பழுத்த மலர்க் கற்பகமே" என அழைக்கும் அருண்மொழி இவ்வுள்ள உருக்கத்தின் பயனாக விளைந்த அநுபவத்தைக் காட்டுகின்றது.

உள்ள முதலனைத்தும் ஒன்றாய் உருகவரின்*
உள்ளம் உருகவந் துன்னுடனாம்—தெள்ளி

---

* 'ஒன்ற ஒருவவரின்' என்றும் பாடம்.

உணருமவர் தாங்கள் உளராக என்றும்
புணருவா னில்லாப் பொருள்.

என்றும் திருக்களிற்றுப் படியார், இவ்வுந்தியார்க் கருத்தினை விளக்கி நிற்கும்.

ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல உந்தீபற
விமலற்(கு) இடம்அது என்(று) உந்தீபற. 8

(வி – ரை) மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்று சொல்லப்பட்ட ஆறு ஆதாரங்களிலே முறையே பிரமன், விஷ்ணு, உருத்திரன் மகேசுவரன், சதாசிவம் என்னும் தெய்வங்களை ஞானாசிரியனின் கருணையினாலே பெற்றுத் தியானிப்பது ஆதாரயோகம் என்று கூறப்படும். இதற்கு மேலாக இப்பற்றுக் கோடுகளைத் தானே நெகிழும் வண்ணம் தியானித்து, அங்ஙனம் தியானிக்கின்ற எண்ணமும் கெடஅதுவது வாய் நிற்பது நிராதார யோகம் எனப்படும். இம்முறையே எண்ணொன்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள்பால் இறைவன் உள்நிற்பன். இதுவே அப்பரம் பொருள் இருக்கும் இடமுமாம் என்றவாறு.

இவ்விரு யோகங்களையும் தூல சூக்கும பரம் என மும் மூன்றாகப் பகுத்து ஏழு பாடல்களில் திருக்களிற்றுப்படியார் விளக்கும்.

ஆக்கில் அங்கேயுண்டாய் அல்லதங் கில்லையாய்
பார்க்கில் பரமதன்(று) உந்தீபற
பாவனைக்(கு) எய்தாதென்(று) உந்தீபற. 9

(வி – ரை) இவ்வாதார யோகத்தில் ஆறு ஆதாரங்களிலும் தியானித்துக் கொண்டிருந்த தெய்வங்களைத் தியானிக்கும் பொழுது உண்டாய், தியானித்தல் அற்ற பொழுது இல்லையாய் இருத்தலின் அவையே சிவபரம் பொருள் என்று கருதற்க. அச் சிவபரம் பொருள் மாற்றம், மனம் கழிய நிற்பது ஆதலின் பாவனையால் காண இயலாது என்றவாறு.

அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாக
துஞ்சா துணர்ந்திருந் துந்தீபற
துய்ய பொருளிதென் றுந்தீபற.

(வி - ரை) திருவைந்தெழுத்தையே பற்றுக் கோடாக, அதன் உண்மையறிந்து உணர்தலையே அறிவாகக் கொண்டு மடியின்றி ஓதியுணரல் வேண்டும். அத்திருவைந்தெழுத்தே ஞானமே திருவுருவாய இறைவனின் வடிவமாகும் என்றவாறு.

'நமச்சிவாய வாழ்க' என்ற விடத்துத் தூலபஞ்சாட்சரமும், 'சிவாயநம எனப் பெற்றேன்' என்ற விடத்துச் சூக்கும பஞ்சாட்சரமும் கூறப்பட்டிருத்தல் காண்க. சிகரம் இறைவனையும், வகரம் திருவருளையும், யகரம் உயிரையும், நகர மகரங்கள், மலங்களையும் குறிப்பனவாம். உயிர்கள் மலவாதனை நீங்கி, திருவருளைப் பெறுவதற்கு இத்திருவைந்தெழுத்தே உதவுவதாகும். இதனைத் துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும் நெஞ்சகம் நைந்து நினைதல் வேண்டும் எனத் திருஞான சம்பந்தரும், இதனது பயன் சிவகதியே எனத் ("சிவாயநம என நீறணிந்தேன் தருவாய் சிவகதி") திருநாவுக்கரசரும், இதனை இடையருது ஓதிய பயிற்சி வயத்தால் தான் மறக்கினும் தன் நா மறக்காது எனச் (நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே") சுந்தரரும், இத்திருமந்திரமே தனக்குத் திருப்பெருந்துறையில் இறைவன் குருமூர்த்தியாய் வந்து அருளியாட்கொண்டது என (நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்) மணிவாசகரும் கூறியிருத்தல் கண்டு இதன் பெருமை யறியலாம்.

திருவைந் தெழுத்தே இறைவனது வடிவமாகும் என்பதனை "அஞ்செழுத்துமே அம்மையப்பர் தமைக்காட்டுதலால்"என்னும் திருக்களிற்றுப் படியாராலும், ஓங்காரமே நல் திருவாசி உற்ற தனில் நீங்கா எழுத்தே நிறை சுடராம்" எனவரும் உண்மை விளக்கத்தாலும் அறியலாம். இதுவே இறைவனது திருநாமமும் ஆகும் என்பதனைத் "திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்" என வரும் திருநாவுக்கரசர் வாக்காலும், "எண்ணிலேன்

(தொடர்ச்சி 426-ம் பக்கம் பார்க்க)

தெய்வீகன்

திரு. சி. முனிரத்தினம் அவர்கள்,
(புலவர் இறுதிநிலை)
சி. பா. சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்.

உலகம் போற்றும் இமயப்பொருப்பின் ஒரு பகுதியே திருக்கயிலை. கயிலையிலுறையும் கருணாமூர்த்தியான சிவனார் ஓரமயம் தம்தேவியோடு ஒருமித்து ஆடியும் பாடியும் இன்பமாயிருந்தார். அஞ்ஞான்று அறிவிப்பு யாதுமின்றி இமயவேந்தன்-மலையரையன் அவண் புகுந்தனன். இம்மாதுலனைச் சிவன் கண்டு சீற்றம் கொண்டார். உமையும் அஞ்சினள். வேந்தனும் வெருண்டனன். வேணியான் வெகுளியில் வெடித்தன சொற்கள். 'அரைய! அறிவியாது உட்புகுந்து பொறுத்தற்கரிய பிழை செய்தனை. எனவே மண்ணுலகில் மானிடனாய்ப் பிறந்துழல்க!' எனச் சபித்தார். மலைவேந்தன் கலக்கமுற்றுப் பொல்லேன் அறியாமைப் பொறுத்தருள்வீர் என வேண்டினன். இந்நிலையில் தந்தைக்குப் பரிந்து உமையும் தலைவனை நோக்கி இன்மொழி பல கூறியிறைஞ்சினள். சாபவிடை தருமாறு பணிந்து நின்றனள்.

எவ்வுயிர்க்கும் இரக்கம் காட்டும் எம்மானுள்ளத்தில் கருணை பிறந்தது. மாமனின்ற மகளே! விதித்ததை விலக்கேனாயினும் சிறிது மாற்றம் தருகிறேன் என அரையனை நோக்கினார். அரைய! அவனியிலன்னையிடத்துப் (யோனியிடமாக) பிறவாமல் வேள்வியிற்றோன்றிக் கேள்வியிற் சிறந்தவனாய்ப் பன்னாட்கள் வாழ்ந்து அரசாள்க. பின்னர் நின்குடிவழி நிறுத்தி என்னடியை யடைகெனச் சாபவிடையருளினார். ஊழிற் பெருவலி பெற்ற இம்மன்னன் உலகு வந்துய்த்த பேற்றினைக் காண்பாம்,

தோற்றமும் ஏற்றமும்

"மங்கையர் வதன சீத மதிஇரு மருங்கும் ஓடி - செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி" நாட்டின் நடுவண் தென் பெண்ணை யாறுஓடி மண் வளம் செய்வதை இலக்கியங் களானறியலாம். இந்நடுநாட்டின் நன்னகரே 'திருக்கோவலூர்'. இந்நகரின்கண் "குகமுனி" என்பார் வானகத்துய்க்கும் வழி யறிந்து வேள்வியொன்றியற்றிருந்தனர். இவ்வேள்வியிற்றுன் சாபம் பெற்றச் சயிலன் இளஞாயிறெுப்பத் தோன்றினுன். இம் மகவின் தோற்றங்கண்டு முனிவர் மிக மகிழ்ந்தார். தேயு ஈன்றமை கருதியும் தேவனுலுதித்தமை நோக்கியும் " தெய்வீ கன் " எனப் பெயரிட்டார். அரசஇலக்கணங்களனைத்தும் அமைந்த இத்திருமகனை உலகோர் உணரவே உமையொரு பாகர் அனுப்பினரென எண்ணிய முனிவர் கண்ணெனக் காத்து வளர்த்து வரலானுர். யாகத்தின் பயனுக யான்பெற்ற பேறிஃதே எனத்தேற்றமானுர்.

புவியாள வந்த பொருப்பன் அரசநலன்களால் வளர்ந் தான். மாரனெனத் திகழ்ந்தான். கரியனைய வன்மைபெற்று அரியன்ன தோற்றம் பெற்றுன். அறிவும் திருவும் நிரம்பி அரசர்க்குரிய படைக்கலம் பயிலல் முதலிய கலைகளைக் கற்று வல்லனுனுன். பக்தியிற் சிறந்து பண்பாடு கொண்டான். காளை யம் பருவமெய்தியக்காலை போர்ப் பயிற்சிப் போட்டிகளில் கலந்து வெற்றி பல கண்டான். முனிமகன் தோற்றங்கண்ட மக்கள் பலர் விரத்திற்கு வேலனே! அழகிற்கு அயிலனே! அறத் திற்கரனே! என அயிர்ப்பர். அதிசயித்துப் போற்று நின்றனர்.

அக்காலை தமிழக மூவேந்தரும் தெய்வீகனின் புகழைக் கேள்வியுற்றனர். இத்திருமகனினுற்றலைச் சோதிக்கத் தலைப் பட்டனர். அவ்வாறே திருமகனைப் பலபோர்க்கலைப் போட்டியில் ஈடுபடுத்தினர். யாவற்றிலும் வெற்றிகண்ட தெய்வீகன் பாராட்டுகளைப் பெற்றுன். இறுதியாக வான்புரவியொன்றில் ஏறிக் கணப்போது இவர்ந்துவரின் அவ்வெல்லைக்குளடங்கிய நாட்டையுமக்கே யுரிமைப்படுத்துவோ மென்றனர். மும்மன்னர் கூற்றுச்ஞூம் முனிமைந்தனுடன் பட்டு, அரியெனப் பரிதாவிக்

காற்றினும் கடிது சென்று கணப்போது கழித்தனன். காவலர் மூவரும் மக்கள் பலரும் கண்டு களித்தனர். தெய்வீகனுற்ற லுக்குவமை கூற வியலாது திகைத்தனர். தாங்கள் கூறிய வாறே வடக்கே தென்னியல் கடியாற்றினை எல்லையாகவும், கிழக்கே விரிகடலை எல்லையாகவும்; தெற்கே திருமாலிருஞ்சோலை எல்லையாகவும்; மேற்கே கொல்லிமலை, வதிட்டகுடி வெள்ளாறு எல்லையாகவும் அடங்கிய நிலப்பரப்பாம் நடுநாட்டினை உரிமை யாக்கி விடுத்தனரென்பதை ‘மன்னியல் பசும்புரவியேறி’ எனத் தொடங்கும் சதகச் செய்யுளானறியலாம்.

ஆட்சியும் காட்சியும்

திருமுனைப்பாடி நாட்டை முடிமன்னர் மூவரும் தெய்வீக னுக்கு அளித்ததோடன்றி, தாங்களே யுடனிருந்து முடி சூட்டி யும் மகிழ்ந்தனர். அஃதுமின்றி, தத்தம் புதல்வியரைத் திரு மகற்கு திருமணம் செய்து கொடுக்கவும் முன் வந்தனர். அவ்வாறே சேரன் மகள் ‘பதுமாவதியும்’, சோழன் மகள் ‘சண்பகமாலையும்’பாண்டியன்மகள் ‘காஞ்சனமாலையும்’தெய்வீக மன்னர்க்குப்பட்டத்தரசிகளாக்கிவிட்டு கழிபேருவகை எய்தினர். கோவலூர்க்கோ முடிமன்னர் மூவர்க்கும் மருகனுன பேற்றை எண்ணி எண்ணி மகிழ்ந்து மிடியின்றித் தன்னுட்சியை நிறுவலானுர்.

தனதாட்சியில் மக்கள் நலமுற வாழ்தற்குரிய வசதிகளை யெல்லாம் செய்வித்தார். கோல்கோடாது மனுமுறை காத்து ஆட்சி செய்தார். தன்னுட்சியில் ‘தெய்வீகனூர்’ என்ற ஒரு நகரைத் தன்பெயரால் ஏற்படுத்தினுர். அவ்வூரே இன்று ‘தேவனூர்’ எனமருவிப் பெண்ணையின் வடகரையிலுள்ளது. சிறந்த படைச்செல்வங்களைப் பெற்று வெற்றிவேந்தனுக விளங்கினுர். ஒரமயம் ‘கம்பமதமுத்தலைக்காராண்டகன்’ என்ற அரசனை வெற்றி கண்டுள்ளார். மூவேந்தருடன் மற்போர் புரிந்து வெற்றி கண்டு, “மற்போர்க்கிவன் நரசிங்கனே” எனப்பாராட்டு தலைப் பெற்றுர். தென்னவன் முதலான மூவேந்தரிடத்திலும் பொன்முடிகள் பெற்றுத் தன்முடியோடு நான்முடியாளனுய் விளங்கினுர்.

இனி, "பணிவெள்ளி செம்பொன்............" எனத் தொடங்கும் பாடலால்: நவமணிகளிழைத்த அரியாசனத்தையும், ஆபரணங்களையும் பெற்றிருந்தா ரென்பதையறியலாம். தவிர, கொன்றை, கூவிளம், குமிழ், குலவு பரிமளம், கோங்கு, கமலம், சண்பகம், செங்குவளை, வேம்பு, துளவு, வகுளம், மாதுளை முதாலான பன்னிரண்டலர் மாலைகளைத் தாங்கிச் சுந்தர விசால மார்பனுய் விளங்கினுர். வாகை, தும்பை முதலான போர்மாலைகளையும் தாங்கினுர். தேவர்களுக்குரிய மாலைகளையே தானும் தரித்திருப்பதை நோக்க இம்மன்னரது சிறப்பையளவிடல் யாங்கனம்? மற்றும், பின் கூறப்பெறும் ஆதாரங்களை நோக்க இம்மன்னர் காலத்தில் ஔவையார், கபிலர், மாரூேக்கத்து நப்பசலையார் ஆகிய புலவர்கள் இருந்து பாடிப் புகழ்ந்து பரிசு பல பெற்று வாழ்ந்ததாகத் தெரிகின்றது. திருக்கோவலூரிலுள்ள விரட்டேச்சுவரர் ஆலயத்திற்கு பல திருப்பணிகள் செய்துள்ளார்.

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்."

என்று கூறும் தமிழ்மறைக் கேற்ப ஆட்சிநலன் சிறந்ததென்க.

(தொடரும்)

குறிப்பு: *"இவ்வரலாற்றுக் கட்டுரை அருணசல புராணத்திலுள்ள 'அண்ணமலைச் சதகச் செய்யுள் சிலவற்றைக் கொண்டு ஆய்ந்தெழுதப்பட்டது."*

(முன் 422-ம் பக்கத் தொடர்ச்சி)

உன் திருநாமத்தெழுத்து ஐந்தும் என் ஏழமை யதனுலே" என வரும் மணிவாசகர் வாக்காலும் அறியலாம். தில்லைப் பெருமானின் திருவுருவத்தில் இவ்வைந்தெழுத்தும் விளங்கி நிற்கும் என்பதைச்,

சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா விசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்–பார்க்கில்
இறைக்கு அங்கிநகரம் அடிக்கீழ் முயலகனுர்
தங்கும் மகரமது தான்."

என வரும் உண்மை விளக்கத் தானும் அறியலாம்.

(வளரும்)

திருவடிப் பெருமை

திரு. க. சுப்பிரமணியன் அவர்கள்,
ஆத்தூர்.

திருவடி என்றவுடன் தில்லையில் கூத்தியற்றும் பெருமான் கழலடியிலுள்ள பொற்சிலம்புகளின் ஓசை கணீர்! கணீர் என நம் செவிகளில் ஒலித்து இன்பம் தருகின்றது. அடியைத் தேடிச் சென்ற மாலும் மயங்கி விட்டார்! முடியைத் தேடிச் சென்ற அயனும் அயர்ந்து விட்டார்! அவ்விருவராலும் காணமுடியாத திருவடி யிரண்டையும் இறைவன் எனக்கு விரும்பிக் காட்டியருளினன். என்னே! அவன் திருவடிப் பெருமை! என்பார் மாணிக்கவாசகர்.

'தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்.,' என்பது அவர் மணிவாக்கு.

இறைவன் திருவடிகளை இடையருது வழுத்தி வர வேண்டும். அதுவே அவனது அருளைப் பெறுவதற்குரிய வழி. அவன தருளைப்பெற நாம் அருள்நெறியில் நிற்க வேண்டும். பொருளைத் தேடும் முயற்சியோடு மட்டும் நின்றுவிடாது அருளைத் தேடும் முயற்சியிலும் ஈடுபட வேண்டும். பொருளைத் தேடுவதோடு தம் வாழ்நாட்களை முடித்துக் கொள்ளும் மக்கள் பலர். இவர்கள் இவ்வுலகிற்கு மீண்டும் வாரா நெறிக்குரிய அருளைத் தேட மறந்து விடுகின்றனர்.

அருள் நெறியில் செல்லாத அறிவிலி கட்கு யாண்டும் இவ்வுலகம் தான் புகலிடம் என்பதை வள்ளுவப் பெருந்தகையும் அறுதியிட்டு உறுதி கூறியுள்ளார்.

'அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை' என்பது அவர் வாக்கு. அருளில்லார்க்கு அவ்வுலகத்தில் இடமில்லையென்றால்

அவர்கள் எங்கு செல்வார்கள்? ஒன்று நரகம் புக வேண்டும் அன்றி இவ்வுலகில் மீட்டும் பிறந்து உழல வேண்டும். பிறவி யென்னும் பெருங் கடலை நீந்திக் கடப்பதற்குரிய அருட் தெப் பத்தைத் தேடி அடையும்வரை அவர்கட்கு இறைவன் திருவடி கிட்டுவதில்லை என்பதை அருளை மறந்து இருள்வழிச் சென்று பொருளைக் குவிக்கும் மக்கள் உணர வேண்டும். எனவே, அன்பின் அடிப்படையில் நின்று அருள் நெறியின் துணை கொண்டு ஆண்டவனின் திருவடியைப் பற்றவேண்டும்.

இறைவன் திருவடி இம்மையில் நமக்கு நல்வாழ்வையும், மறுமையில் பேரின்ப வாழ்வையும் தரும் என்பது சான்ருேர் கண்ட உண்மை - முடிபுமாம். மருத்துவர் ஒருவர், நோயாளியின் துன்பத்தைப் போக்கும் பொருட்டு அவனுக்கு அறுவை மருத்து வம் செய்கிருர். தன்னுடலை அறுத்துத் தனக்குத் துன்பம் தருகிருரே யென எந்த நோயாளியும் மருத்துவரைக்கண்டிப் பதில்லை. மாருக அன்பு செலுத்துவதையே காண்கிருேம். இறைவன் திருவடி தொழுங்கால் நமக்குத் துன்பம் உண்டா குமேயானுல் அது நம்முடைய நன்மையின் பெருட்டே யென வும்; இறைவன் திருவருள் மருத்துவனுரின் செயலைப் போன்றதே யெனவும் கொள்ளல் வேண்டும். துன்பமிகுதியால் இறைவனைத் திட்டுவதும், அவனுடைய இருப்புக்கு மறுப்புக் கூறலும் மதி யுடைய செயலாகாது.

‘வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன்போல் மாயத்தால்
மீளாத்துயர் தரினும் விற்றுவக் கோட்டம்மா நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.’

என்பது திவ்யபிரபந்தம்.

பெருமான் திருவடிகளை வழிபடும் முறையை நமக்கு மாணிக்கவாசகர் அழகாகச் சொல்லித் தருகிருர். அநேகர் இறைவனிடம், தங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தாம் எளிதில் அடைய வேண்டும் என்றும், நல்வாழ்வு வாழ வேண்டும் என்றும் முறையிடுகிருர்கள். இது தவறு ‘எல்லாம்

வல்ல இறைவனுக்கு நம்முடைய குறைகளை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? நாம் சொல்லாமல் நம் உள்ளத்தில் உள்ளதை அறியும் உணர்வும், நம் தேவைப் பொருட்களை அறியும் ஆற்றலும் இறைவனுக்கு இல்லையா? பின் ஏன் நாம் குறைகளை முறையிட வேண்டும்? எனப் பல கேள்விக்கணைகளைத் தம்முளே தொடுக்கிறுர் மணிவாசகப் பெருமான். இறுதியில் தக்கவிடையும்பெற்று நமக்குத் தருகிறுர் தீந்தமிழில்,

‘வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட
முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்தன் விருப்பன்றே.’

என்பது திருவாசகம்.

நமக்கு வேண்டியது யாது? இனிமேல் வேண்டப்படுவது யாது? என்ற கேள்விகட்கெல்லாம் இடமில்லாது, இறைவனிடமே நம் தேவைப் பொருட்களை அறிந்து கொடு எனக் கேட்கிறுர். இறைவனை வழிபடும் முறையால் மாணிக்கவாசகர் பெருமானைச் சிக்கெனப் பிடித்துக் கொள்கிறுர்.

‘சிக்கெனப் பிடித்தேன்! எங்கெழுந்தருளுவதினியே!’
என்பது அவர் திருவாக்கு.

இறைவன் திருவடி பொறுமையின் இருப்பிடம். நம்முடைய குற்றங்களைக் குணமாகக் கருதி அருள்புரியும் கருணை வள்ளல் அவர்.

‘நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்
நாவி னுக்கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லலென் றிவர்கள்

குற்றஞ் செய்யினும் குணம்எனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே.'

இப்பாடலிலுள்ள குற்றம் புரிந்தோர் எண்மரையும் தன் அருட் கரத்தால் அணைத்துக் கொண்ட பெருமான் திருவடிச் சிறப்பை உணரார் யார்? நம்மால்வெறுக்கப்படுகின்ற செயலை ஒருவர் செய்வாரானுல் அது அவருடைய அறியாமையால் நிகழ்வது என்ற எண்ணம் ஏற்பட வேண்டும். குற்றம் புரிகின் றவர்களின் அறியாமைக்கு வருந்தி மேலும் அவர்கள் அவ்வாறு செய்யாதிருக்க அருள்புரிய வேண்டுமென இறைவனிடம் விண்ணப்பம் செய்யும் பெருங்குணம், பார்க்குமிடமெங்கும் பரமன் திருவுருவைக் காணும் பக்குவமுடைய ஆன்மாக் களுக்கே எளிதில் வந்தமையும். மல பந்தங்களினுல் கட்டுண்ட ஆன்மாக்கள் தமது அறியாமையால் செய்யும் குற்றங்களைப் பொறுத்து, இறைவன் அருள்புரிவதை,

"வெறுப்பனவே செய்யும்என் சிறுமையைநின் பெருமையினுற்
பொறுப்பவனே...................."

என்னும் திருவாசகத்தால் அறியலாம்.

பெருமான் திருவடி பொறுமையின் புகலிடம் - பெருமையின் பிறப்பிடம்-அடியார்கள் தங்கி இளைப்பாறும் இன்பப் பூங்கா! அவன் திருவடியைத் தனது உள்ளத்தில் பதித்து வைத் தவர் நாவுக்கரசர். அதனுலன்றோ சமணர்களால் சுண்ணும்புக் காளவாயில் இடப்பட்ட பொழுதும் கூட அங்கு அவருக்குப் பெருமான் திருவடி துணை செய்தது. ஆன்மாக்களை வீடு பெறச் செய்யும் பீடுடைய பெருமான் திருவடித்தாமரையை தலை மீது சூடுவோம் – சூடிநின்றேடுவரம் – சூழ்கொன்றைத்தார் பாடுவோம் – பாடிப் பரமனடி பரவுவோம்.

1137-ம் ஆண்டு, மாசி, பங்குனி மாதங்களில்

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
9434	சுடர் (மலர் 10) உ. வே. சாமிநாதய்யர் மலர்	தில்லித் தமிழ் சங்க வெளியீடு.
9435	The Pachaiyappa's College Magazine Vol. XLII No. 1. December '61.	The Pachaiyappa's College, Madras. 30.
9436	Rauravagama Vol. I	By N. R. Bhatt.
9437	The Journal of the Tanjore Saraswathi Mahal Library Vol. XV No. 3	By S. Gopalan, B. A., B. L., Hon-Secretary, T. M. S. S. M. Library Tanjore
9438	Thirukkural (with Translation in English)	By. Rev. Dr. G. U. Pope, Rev. W. H Drew, Rev. John Lazarus & Mr. F. W. Ellis. Kazhagam Publication.
9439	Sri Kumaragurupara Swamigal Arts College Annual Magazine Vol. 1. 1961-62	Sri. K. G. S. Arts College, Srivaikuntam.
9440 & 41	மெய்ந்நெறி முப்பது (ஸ்ரீ மெய்கண்டார் குரு பூஜை நினைவு வெளியீடு 8—11—1961)	இயற்றியது வடிவை. சிவசுப்பிரமணிய பிள்ளை மெய்நெறிக்கழகம், நீராவித் தெரு, வடிவீசுவரம்.
9442	திருமந்திரம் (நான்காம் தந்திரம்)	திருவாவடுதுறை ஆதீனம்.
9443	திருமந்திரக் கட்டுரை (கர்ப்பக்கிரியை)	ஷை
9444	செந்தமிழ் பூம்பொழில்	தருமையாதீனம்.

9445	ஸ்ரீமத் பகவத் கீதாசாரம்	ஸ்ரீசுவாமி சிவானந்தர்(தமிழாக்கம்) ஸ்ரீகல்யாண சுந்தரம் (Late)
9446	சுடர் மலர் 10	தில்லித் தமிழ் சங்கம்.
9447	திருநாவுக்கரசுத் தேவர் "திருஏகாதமாலை" மூலமும் உரையும்	ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார், திருப்புகலூர் ஸ்ரீ அக்னீஸ்வரர் தேவஸ்தான வெளியீடு.
9448	திருமுருகாற்று' [illegible] விளக்கம் (ஆசிரியரின் மணி விழாமலர்)	R. பஞ்சநாதம் பிள்ளை, தமிழ்பண்டிட், M. M. Girls High School, உறையூர்.
9449	மதுரை ஸ்ரீ கூடலழகா [illegible]யில் வரலாறு 1961	தேவஸ்தான வெளியீடு.
9450	கொங்கு நாட்டுத் தலங்கள் (தேவாரத் திருபதிகங் களும், தலவரலாறுகளும்)	புலவர். ந. ரா. முருகவேள் எம். ஏ. எம். ஓ. எல்.
9451	தமிழன் எங்கே?	தென்புலோலியூர் மு. கணபதி பிள்ளை.
9452	அருள்நெறித்தொடர் (அருணகிரியார்–குருபரர் அறி வுரைகள்)	சாமி, சிதம்பரனுர் தமிழ் புத்தகாலயம்.
9453	Students' Success in Life.	Swami Sivananda.
9454	Easy Steps to Sanskrit (First step)	B. B. Kamort.
9455	தமிழ்பா மஞ்சரி (2-வது பாகம்)	கி. வா. ஜகன்னுதன்.
9456	Lord Siva and His worship	Swami Sivananda.
9457	Sixty three Nayanar Saints	ஷை
9458	Sakaladhikara (with Translation in Tamil)	Sarasvathi Mahal Library-Tanjore.
9459	Silparatnam	

(தொடரும்)

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

திருமுறை வெளியீடுகள்

			ரூ.	ந.பை
1	விநாயகர் திருமுறை	...	0	06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3	50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3	00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும்) (புதிய பதிப்பு)	...	2	75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,, ,,	...	2	00
6*	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ,,	...	1	30
7*	திருவாசகம் ,,	...	0	56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு)	...	2	90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்)	...	0	56
10*	திருமந்திரம் ,, (புதிய பதிப்பு)	...	2	25
11	பதினோராந்திருமுறை ,, (அச்சில்)			
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0	25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன்	...	0	50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்) (அச்சில்)			
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு	...	0	37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்)	...	3	00
17	தாயுமான சுவாமிகள் பாடல்-குறிப்புரையுடன் (அச்சில்)	...		
18	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்)	...	1	75
19	கந்தபுராணம் – முதல் மூன்று காண்டங்கள் ,,	...	2	75
20	,, யுத்த தேவகாண்டம் ,,	...	2	00
21	,, தக்ஷகாண்டம் ,,	...	1	50
22	கந்தபுராண வசனம் (அச்சில்)			
23	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன்	...	0	25
24	கந்தரனுபூதி	...	0	13
25	கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	...	0	37
26	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும்	...	0	06
27	கந்தர் கலிவெண்பா - மூலமும் – உரையும்	...	0	37
28	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0	50
29	சகலகலாவல்லிமாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0	06
30	சிவஞான சித்தியார், ஹிந்தி மட்டும் (அச்சில்)			
31	திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1	50
32	திருக்குறள் – பொருட்பால் ,,	...	2	50
33	திருக்குறள் – காமத்துப்பால் ,,	...	1	00
	ஷை 31, 32, 33 திருக்குறள் 3 புத்தகமும்	...	4	00

Registered with the Registrar of Newspapers for India
Under No R. No 1485/57
Regd No. M. 5574 குமரகுருபரன்.

34	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	... 0 75
35	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	... 0 13
36	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	... 0 75
37	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	... 0 37
38	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை - மதுரை மீனாட்சியம்மை குறம்	... 2 75
39	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்	... 1 25
40	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை - தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	... 1 00
41	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை	... 1 00
42	சிதம்பரச் செய்யுட்கோவை	... 0 75
43	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	... 0 50
44	தமிழிசைப்பாக்கள் [அச்சில்]	
45	பெரியபுராணம் – உரைநடை	... 2 00
46	திருவிளையாடற் புராணம் – உரைநடை	... 2 25
47	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	... 0 50
48	அபிராமி பட்டர் பிரபந்தம் (மூலம்மட்டும்) (அச்சில்)	...
49	திருக்கயிலைத் திருமுறை	... 0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	... 0 19
51	செந்திலாண்டவன் மகிமை	... 0 13
52	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு	... 1 37
53	ஷை ஷை பொருட்பால் 2-ம் பதிப்பு	... 2 75
54	ஷை ஷை காமத்துப்பால் ஷை	... 1 20
55	அபிராமி அந்தாதி – தெளிவுரையுடன்	... 0 50
56	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்)	... 0 50

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கல்லக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோவில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- • இக்குறிப்பிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் – '62